

# செங்குந்த மித்திரன்

SENGUNTHAMITHRAN

உள்ளுறை


| | |
|---|---|
| சங்கத்தின் பொதுக் கூட்டம் | க௫க |
| முன்னுரை வாழ்த்து | ககச |
| தொழிலும் வியாபாரமும் | ககஅ |
| அறிவு | கஎக |
| ஓர் கல்வறிக்கை | கஎஎ |
| ஓர் வேண்டுகோள் | கஅ0 |
| சைவ பரிபாலனம் | கஅரு |
| கல்வியும் ஒற்றுமையும் | கஅஎ |
| மதிப்புரை | கக0 |
| கடிதங்கள் | ககரு |
| மறு வேண்டுகோள் | கக௬ |


ஆசிரியர்

காஞ்சி நாகலிங்க முனிவர்

1927



Owner:—T. N. Sapapathi Mudaliar, Madras.

OFFICE … REGISTRAR OF BOOKS
17 JUN 1927
MADRAS

உ

முருகன் துணை

# செங்குந்த மித்திரன்

[ஆசிரியர்: காஞ்சி நாகலிங்க முனிவர்]

மாதப் பத்திரிகை

தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்க வெளியீடு

| | | |
|---|---|---|
| தொகுதி - க | அட்சய௵ வைகாசிமீ | பகுதி - ௩ |

வேலுமயிலுந் துணை

கருமான் மருகனைச் செம்மான் மகளைக் களவுகொண்ட
வருமா குலவனைச் சேவற்கைக் கோளனை வானமுய்யப்
பொருமா வினைச்செற்ற போர்வே லனைக்கன்னி பூகமுடன்
தருமா மருவுசெங் கோடனை வாழ்த்துகை சாலநன்றே.

---

## தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் பொதுக் கூட்டம்

இக் கூட்டச் சிறப்பினை நமது செந்தமிழ்நாட்டு அரிய பத்திரிகைகள் பலவும் முன்னரே நடந்த வண்ணம் வெளியிட்டுள்ளன. இப் பத்திரிகைகட்கு நம் சங்கத்தினர் நன்றியறிவினையும், வாழ்த்தினையும் தெரிவித்துக்கொள்ளுகின்றோம். இக் கூட்டச் சிறப்பினை செங்குந்த மித்திரன் எடுத்துரைக்கும் கடப்பாடுடைமை நோக்கி இவ்விடத்திற் சிறிது எழுதுகின்றேம்.

சென்னை-600008

இக் கூட்டம் பிரபவஞு சித்திரைமீ கஎ-ஆம் தேதி (29-4-27) வெள்ளிக்கிழமை மாலை ஐந்து மணிக்குச் சென்னைக் கோவிந்தப்ப நாய்க்கன் வீதியிலுள்ள சௌந்தரிய மஹால் என்னும் மண்டபத்தில் 'செங்குந்தகுல வித்துவ ஜனசேகரர்' ஸ்ரீமான் தி. நா. சபாபதி முதலியார் (Municipal Councillor, திருவாரூர்) அவர்களால் கூட்டப் பெற்றது. கூட்டத்திற்குரிய முன் அலுவல்கள் பலவும் காஞ்சி, திருவாரூர், மஞ்சட்கொல்லை முதலிய இடங்களிலுள்ள அன்பர்கள் ஒருமித்து ஒழுங்குபெற அமைத்திருந்தனர். கூட்டம் நிகழும் மகாமண்டபம் 'செங்குந்தகுல மக்களின் நாளோலக்கமன்றே' என ஐயுறுமாறு அணி பெற்று மிளிர்ந்தது.

கூட்டத்திற்கு சற்றேறக்குறைய இருநூறு செங்குந்த குல மக்கள் வந்திருந்தனர்.

அதுபோது, தி. நா. சபாபதி முதலியார் அவர்கள் கூட்டத்தின் நோக்கம் என்னும் அரிய விரிவுரையை மேற்கொண்டு சுருக்கமாகச் செங்குந்த குல மக்கள் முன்னேற்றமடைய முக்கிய சாதனங்களாகவுள்ள சங்கங்கள், பத்திரிகைகள், பிரசாரங்கள் என்று இனிது எடுத்து விளக்கிப் பின்னர் கூட்டத்தினுக்கு வர இயலாத செங்குந்த குலமக்கள் அன்போடனுப்பிய கடிதங்களை வாசித்துக் காட்டினர்.

இக் கடிதங்கள் எழுதிய சீமான்கள்:—

கோட்டாறு C. பன்னிருகைப்பெருமாள்முதலியாரவர்கள் B.A.B.L.,
Tamil Pandit, Science College, Tiruvandram.

கோட்டாறு A. S. முத்தையா முதலியார் அவர்கள் B.A.,
Tamil Pandit, Government High School.

திருநெல்வேலி S. பழனியாண்டி முதலியார் அவர்கள் B.A., B.L.,

மதுரை P. முத்துக்கருப்ப முதலியார் அவர்கள்,
காரியதரிசி, செங்குந்த முதலியார் சங்கம்.

கூறைநாடு V. இரத்தின முதலியார் அவர்கள் B. A.

புதுவை ஆ. வே. முத்தைய முதலியார் அவர்கள் B. A., B. L.,
Secretariat General, President.

புதுவை வீ. துரைசாமி முதலியார் அவர்கள்,
பண்டிட், கல்வே காலேஜ்.



காஞ்சிபுரம் ம. த. சாமிநாத முதலியார் அவர்கள்,
Member, Chingelput District Board, Prasident, Hindu Davasthanam Committee,

சென்னிமலை V. S. செங்கோட்டையா முதலியார் அவர்கள்
Cotton Merchant.

கா, உ. பொன்னுசாமி முதலியார் அவர்கள்,
Tamil Pandit, High School, உத்திரமேரூர்.

ச. சிவஸ்வாமி தேசிகர் அவர்கள்,
காஞ்சிபுரம்.

என்பவர்களாம்.

இப்பால், சுச்சியடிகள் முன்னுரை வாழ்த்து ஒன்றுபடித்துச் சபையில் கொடுக்கப்பெற்றது.

அவ்வாழ்த்தினை இப் பத்திரிகையில் ககூச-ம் பக்கத்தில் காண்க.

இதன் பின்னர், அன்று கூட்டிய கூட்டத்திற்கு மகாஜன திருவுளப் பாங்கின்படி ஸ்ரீமான் S. குழந்தைவேலு முதலியார் (Manager, Finger Print Bureau, Madras.) அவர்கள் தலைமை வகித்தார்கள்.

அப்பால், ஸ்ரீமான் ம. சண்முகசுந்தர முதலியார் எம். ஏ., எல். டி., (Muthialpet High school, Madras.) அவர்கள் கூட்டத்தின் நன்னோக்கத்தை விளக்கமாகவும் விரிவாகவும் எடுத்து இனிது விளக்கினர். இவ்வரிய விரிவுரையில், பண்டைய காலத்துச் செங்குந்த குல மக்களின் அஞ்சாமை, ஆற்றலுடைமை, கொடையுடைமை, மானமுடைமை, ஒழுக்கமேம்பாடு, இடுக்கணழியாமை, ஒற்றுமை, அறிவின் மாட்சி, கல்விநலங்கள், உண்மை யுரைத்தல், சைவசமய பரிபாலனம், உலகந்நன்மைக்குழைத்தல், முதலிய உயர் குணங்களைத் தமது அரும்பெரும் நூலாராய்ச்சி வன்மையாற் பழைய நூற்களின் மேற்கோளை உரைப்பாவிற்கொண்டு செவ்வன் விளக்கி, இனிஇச்சங்கம் எவ்வெத்துறைகளில் நமது குலமக்களின் முன்னேற்றத்திற்காக உழைக்கவேண்டு மென்பதை விவரித்துரைத்தார்.

அதன் பின்னர், இவ்வருஷத்திற்குப் பின்னால் காட்டப்பட்டுள்ள உத்தியோகஸ்தர்கள் தேர்ந்தெடுக்கப் பெற்றனர்:—

## நிருவாகசபை அங்கத்தினர்

### தலைவர் :

திருவாளர். P. V. நடராஜ முதலியார் அவர்கள் பி. ஏ. பி. எல்.,
Commissioner, Religious Endowment Board.

### துணைத்தலைவர் :

,, S. P. அருணாசல முதலியார் அவர்கள், பி.ஏ. பி. எல்.,

,, S. குழந்தைவேல் முதலியார் அவர்கள்,
Manager, Finger Print Bereau.

,, அ. ரு. சி. தியாகராஜ முதலியார் அவர்கள்,
வர்த்தகம், மிராஸ்தார், மஞ்சட்கொல்லை.

### அமைச்சர்:

,, தி. நா. சபாபதி முதலியார் அவர்கள்,
முனிசிபல் கௌன்சிலர், திருவாரூர்.

,, ம. சண்முகசுந்தரமுதலியார் அவர்கள், எம்.ஏ., எல்.டி.,
உபாத்தியாயர், முத்தையாலுப்பேட்டை ஐஸ்கூல், சென்னை.

### பொக்கிஷதார் :

,, S. முருகைய முதலியார் அவர்கள்,
கவர்மென்ட் பென்ஷனர், திருவாரூர்.

## நிருவாக சபையின் இதர அங்கத்தினர்

,, மா. அ. கனகசபை முதலியார் அவர்கள்,
ஜெனரல் போஸ்டாபீஸ், சென்னை.

,, S. M. முருகேச முதலியார் அவர்கள், பி.ஏ., எல்.டி.,
Supt, Director of Public Instruction Office, Madras.

,, மா. பா. கந்தசாமி முதலியார் அவர்கள், பி.ஏ., பி.இ.,
Electrical Overseer, P. W, D,

,, C. S, சபாபதி முதலியார் அவர்கள், பி. ஏ.
Manager City Magistrate's, Office, Egmore,

,, M. சரவண முதலியார் அவர்கள்,
Teacher, Corporation Model School, Mylapore.

,, S. இரத்தினவேல் முதலியார் அவர்கள்,
முனிசிபல் கௌன்சிலர், சைதாப்பேட்டை



திருவாளர். சை.. தி. நடேச முதலியார் அவர்கள்,
Agent's Office, M. S. M. Railway.

,, T. சாந்தலிங்க முதலியார் அவர்கள்.
சைதாப்பேட்டை.

,, சு. சடையப்ப முதலியார் அவர்கள்,
முனிசிபல் கௌன்சிலர், சைதாப்பேட்டை.

,, T. S. சிங்காரவேல் முதலியார் அவர்கள்,
மைலாப்பூர்.

,, வீ. கு. ரு. மு. ஆறுமுக முதலியார் அவர்கள்,
வியாபாரம், திருமலைராயன் பட்டினம்.

,, மு. இராமலிங்க முதலியார் அவர்கள்,
வியாபாரம், திருவல்லிக்கேணி.

,, சு. அண்ணாமலை முதலியார் அவர்கள்,
வியாபாரம், புதுவை.

,, சை. சமரபுரி முதலியார் அவர்கள்,
Stamp and Stationary Office, Madras.

,, C. N. தீர்த்தகிரி முதலியார் அவர்கள்,
Khadar Store, குடியேற்றம்.

,, ஆ. கி. கணபதி முதலியார் அவர்கள்,
வியாபாரம், குடியேற்றம்.

இப்பால், இச் சங்கத்தின் அங்கத்தினர் ஒவ்வொருவரும் வருஷத்திற்கு ஒரு ரூபாய் சந்தா கட்டணமாகச் செலுத்த வேண்டுமென்றும், இச் சங்கத்தின் வெளியீடாக வருவலவும் 'செங்குந்த மித்திரன்' என்னும் மாதப்பத்திரிகைக்குச் சந்தா நேயர்களாகச் சேர்ந்து அதை ஆதரிக்க வேண்டுமென்றும் தீர்மானங்கள் செய்யப்பெற்றன.

இனிச் சங்கத்தின் பொது விதிகளையும் சிறப்பு விதிகளையும் வரையறுக்க நிருவாக சபையினருக்கு அதிகாரம் கொடுக்கப் பெற்றது.

முடிவில், அவைத்தலைவர் அவர்கள் ஸ்ரீமான் தி. கா. சபாபதி முதலியார் அவர்கள் நன்னோக்கத்தையும், இந்த வகையில் உழைக்க முன் வந்திருக்கும் ஸ்ரீமான் ம. சண்முகசுந்தர முதலியார் அவர்கள் நிகழ்த்திய விரிவுரையையும் பாராட்டி, தமது அரிய கருத்துக்களை சுருக்கி யுரைத்து ஆசனத் தமர்ந்தனர்.

இதனோடு, கடவுள் வாழ்த்து, இராஜவாழ்த்து, தேச வாழ்த்துக்களுடன் கூட்டம் இனிது நிறைவேறியது.

---

## கச்சியடிகள் முன்னுரை வாழ்த்து

உரையிடையிட்ட செய்யுள்

**ஆர்கலி யுலகில் அன்பு சான்ற**
**சீர்கெழு தகைசால் செய்யசெங் குந்தரே!**

செந்தமிழ்த் தெய்வம் அறுமுகம் கொண்டபோது உடன் தோன்றிய வீரவாகுதேவர் முதலான இலக்கத்தோன்பதின்மர் வழித் தோன்றிய நீங்கள் எல்லோரும் அச் செந்தமிழ்த் தெய்வத் திருவருளால் என்றென்றும் உலக இன்பத்தில் வற்றாது வாழ்வீராக.

பிரமாணம். இலக்கத்தொன்பதின்மர் முருகக் கடவுள் அறுமுகம் கொண்டபோது உடன் தோன்றியவர் என்பதை,—

"அந்தமில் விளையாட் டுள்ள அறுமுகக் கடவுள் தன்னைத்
தந்திடு மெல்லை யன்னோன் தானையந் தலைவ ராக
முந்திய விறல்சேர் மொய்ம்பன் முதலிய இலக்கத் தொன்பான்
நந்திதன் கணத்தி னோரை நங்கைபால் உதிப்பச் செய்தான்."

எனவரும் கந்தபுராணத்தா னுணர்க.

இவ்விடத்தில்

**கூடிய கூட்டம் குறித்த வினையை**
**நாடியேந் நாளும் நடத்த நாட்டிய**

தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம் நீடூழிகாலம் எல்லாம் வல்ல இறைவன் திருவருளால்

வாழியோ பெரிதே வாழியோ பெரிதே
வேங்கடம் போல ஓங்கி நீடூழி
வாழியோ பெரிதே வாழியோ பெரிதே
ஆர்கலி சூழ்ந்த அவனியில் என்றுமே.



மக்கள்பால்

**அன்பும் ஆற்றலும் அறிவும் பெற்று**
**இம்பர் ஞாலத் திருந்தறங் கண்ட**

முசுமுகச் சோழன் அருந்தவம் பெரும்பகல் தள்ளி முருகக்கடவுளால் கொடுக்கப் பெற்றுச் சோழநாடு வந்த வீரவாகுதேவர் ஆதியோர் ஆரியகுல தெய்வமக்கள் என்றே சொல்ல வேண்டும்.

பி-ம். இலக்கத்தொன்பதின்மரை முசுமுகச் சோழன் முருகக்கடவுள் தவத்தாறு பெற்றான் என்பதை,—

"கோற்றல் கூடிய முசுமுகன் நும்மினும் எம்பால்
ஏற்ற மேதரும் அன்பினன் எழுகடற் புவியும்
போற்ற வைகுவான் நீவிர்கள் ஆங்கவன் புடையே
ஆற்றல் சான்றிடு துணைவரா யிருத்தியென் றறைந்தான்."

எனவரும் கந்தபுராணத்தா னுணர்க.

ஆதல்

**சந்தனப் போதிகைச் செந்தமிழ்த் தலைவன்**
**உந்துகா விரிசூழ் சுந்தரக் கோழியூர்**

சக்கரவர்த்தியாம் முசுமுகச் சோழன் தவத்தாறு பெற்ற வீரவாகு தேவர் ஆதியோரைச் சோணாட்டிற் குடிகண்டபோது தமிழ் மக்கள் ஆக மாற்றி வரிசை பல செய்து போற்றி வந்தனன்.

பி-ம். இலக்கத்தொன்பதின்மரை முசுமுகச் சோழன் சோழமண்டலத்தில் குடிகண்டான் என்பதை,—

"மறைந்தனன் குமரன் ஏக மன்னவன் மகிழ்ச்சி கொண்டு
சிறந்திடு கருவூர் என்னும் திருநகர் அரசின் மேவி
அறந்தரு மாட வீதி யளப்பில புரிவித் தாங்கே
நிறைந்திடு வீரர் தம்மை நிலைபெற இருத்தி னானே."

எனவரும் கந்தபுராணத்தா னுணர்க.

அக்கால்

**வீர வாகுவின் தாரத் தகட்டில்**
**ஆரும் வியக்க அநகன் ஜநகன்**

என்று தோன்றிய மக்கள்வழித் தோன்றல்களே ஆயிரத்துத்தோளாயிரவர் என்றும், செங்குந்த குலமக்கள் என்றும் போற்றப் படுவர்.

பி-ம். அநகன் ஜநகன் முதலான மக்கள் வழித்தோன்றல்களே செங்குந்தகுல மக்கள் என்பதை,—

"நூறெருழியீ ராயிரரின் நவனுமுவர்ச் சிமுர்மறையோன்
ஆறெழுமுன் மூவருணர் அறுதொழிலேற் றறநூலில்
கூறுநெறி பிறழாக்கைக் கோளரெனச் சிறந்தனரால்
ஈறில்சிவன் முகத்துதித்த இருங்குரவர் ஈட்டம்போல்."

எனவரும் கந்தபுராணத்தா னுணர்க.

இவர்கள்

## காரணத் தானும் கைவினை யானும்
## பேர்பல வாகப் பேசிடப் பெற்று

ஒழுக்கத்தின் கோள்கையோர் எனப் பொருள் பட கைக்கோளர் என்றும், பகைவரது உதிரத்தால் சிவந்த குந்தத்தை உடையோர் எனப் பொருள் பட செங்குந்தர் என்றும், அறுமுகக்கடவுள் உடன் தோன்றிய வீரவாகுதேவர் ஆதியோர் உப சுப்பிரமணியர் ஆதல் பற்றி உபசுப்பிரமணிய மரபினர் என்றும் கூறப்படுவர்.

பி-ம். வீரவாகு தேவர் முதலான இலக்கத் தொன்பதின்மருக்கு நிகண்டு நூலார்,—

"கந்தனுக் கிளையோர் கைக்கோ ளர்செங்
குந்தர் கைலைக் குன்றின் காவலர்
சேனைத் தலைவர் செய்வே ளாளர்
நந்தியங் கணத்தோர் நாமமா கும்மே."

குமாரம்

என்று யாப்புச் செய்திருப்பதைக் கவனிக்கற்பாலது.

மற்றும்

## வரும்பல பெயரை வகுத்துக் காட்டும்
## அரும்பெரு நூல்களை யறிவது கடனே

அப் பெயர்களாவன, சோணாட்டு முதலிகள் அல்லது சோழமண்டல முதலிகள், சேனாதிபதிகள் அல்லது சேனைத் தலைவர்கள் என்பன வாதியாம்.

பி-ம். கைக்கோளக் குலமுதலிகள் சோழமண்டல முதலிகள் என்றும் சேனைத்தலைவர்கள் என்றும் விளங்கி வந்தார்கள் என்பதை,—

"கந்தவேள் வரத்தாற் பெற்ற கனைகழல் இலக்கத் தொன்பான்
குந்தரைக் கருவூர் தன்னிற் குடிகண்டு சோணாட் டின்பேர்



மந்திர வழியா லாக்கி மாப்பெரும் தலைமைத் தண்ட
சந்தமும் கொடுத்து வைத்தான் தவலறும் குந்தச் சோழன்."

எனவரும் திருவாரூர்லீலையா னுணர்க.

இவர்கள்

## அறிவும் ஆற்றலும் அன்பும் கொண்டு
## குறுநில மன்ன ராகவும் குவலயம்

போற்றப் பற்பல சிவாலயங்கள் குகாலயங்கள் ஒரு சில விஷ்ணு வாலயங்கள் எடுத்தும் நித்திய நைமித்தியங்கள் தவறாது விதிப் படி செய்தும் வந்தார்கள்.

பி-ம். செங்குந்த முதலிகள் குறுநில மன்னராகவும், தேவாலய தரும பரிபாலனராகவும் இருந்தவர் என்பதை,—

"பன்னிடு மூர்பல பகுப்பி லாண்டவர்
சென்னியின் மதிவளர் தேவன் தளிபல
முன்னமே கண்டவர் முறையில் வைகவே
கன்னிதி கொடுத்திடும் நல்ல குந்தரும்."

எனவரும் திருவருணைமான்மியத்தா னுணர்க.

காலபேதத்தினால்

## மக்கட் கணிசெய வெஃகும் தொழிலை
## கைக்குட் கண்டே கலிசூழ் உலகில்

பாவமற்ற தொழிலாகிய நெய்தற்றொழிலைப் பல நாள் அருந்தவம் கண்டு உபதேச முறையிற் செய்துவருகின்றார்கள்.

பி-ம். கைக்கோளக் குலமக்கள் நெய்தற்றொழிலை உபதேச முறையிற் பெற்றார் என்பதை,—

"திக்கெட்டும் போற்றும் திறல்வீர செங்குந்தர்
முக்கட்செம் மேனி முதல்வனருள்—கைக்கொண்டே
மக்கட் கணிசெய்ய வைத்தனரால் நெய்தொழிலை
வெஃகப் படாதவரார் வேண்டி."

எனவரும் புகழ்மாலையா னுணர்க.

ஆயினும்

## காலப் போக்கைக் கண்டு வழிவழி
## சாலத் திருத்தம் சமைத்தல் சபையின்

முக்கிய கடனாகக் கொள்ளற்பால தென்பது ஒவ்வொரு செங்குந்த குலமக்கள் மனத்தினும் வேறான்றித் தழைத்தோங்க வேண்டுவது ஒருதலையாம்.

பி-ம். செங்குந்த குலமக்கள் காலங் கண்டு சாலத் திருந்த வேண்டும் என்பதை,—

"பழையன கழிதலும் புதியன புகுதலும்
வழுவல கால வகையி னானே."

எனவரும் தொல்காப்பியத்தா னுணர்க.

இனி

**வேண்டுவார் வேண்டுவ விரைந்தருள் குரவன்**
**காண்டகு சேவடி காப்பெனக் கொண்டு**

முன்னுரையை இம்மட்டில் முடிப்பாம்.

சுபம் ! சுபம் !! சுபம் !!!

---

# தொழிலும் வியாபாரமும்

உலகத்தில் என்றும் நடைபெற்று வரும் தொழில்கள் ஒவ்வொன்றும் மக்களுக்கு இன்றியமையாதது ஆயினும் அதனுள் நெசவுத் தொழில் மிகவும் ஜனங்களுக்கு அத்தியாவசியமாக இருந்து வருகிறது. இத் தொழிலின் மாட்சிகொண்டே தெய்வப்புலவர் திருவள்ளுவனார் 'செய்யும் தொழிலைச் சீர்தூக்கிப் பார்க்கில்—நெய்யும் தொழிலுக்கு நேரில்லை' என்று சொல்லி செய்துவந்தனர். இத் தொழிலை இப்போது இவ் வகுப்பாருக்குத்தான் சொந்தமென்று சொல்ல வழியில்லை. பண்டைக் காலத்தில் பெண் மக்களுள் பெரும்பாலார் இந் நெசவுத் தொழிலைச் செய்து வந்ததாக ஒருவாறு நூல்களாற் றெரிய வருகிறது. அப் பெண் மக்கள் இப்போது நம் தமிழ் நாட்டில் வழங்கி வருகிற ஜாதியில் இந்த இனத்தைத்தான் சேர்ந்தவர்களென்றும் சொல்ல ஒருவராலும் முடியாது. ஆனால் தொழிலின் வழியாக அவர்களுக்குப் பேரிட்டு வழங்கி வந்திருக்கலாம். இவ் வழக்கு நம் தமிழ்நாட்டு வழக்காகும். அது நிற்க.

இக் காலத்தில் நடந்துவரும் வியாபாரங்கள் பல துறையில் விரிந்து கிடக்கின்றன. ஒவ்வொரு வியாபாரமும் அதனைச்



செய்து வருவோர் தகுதிக் கேற்றவாறு பயனைக் கொடுத்துக் கொண்டுதான் வருகிறது. முந்திய காலத்தில் நம் தமிழ் மக்கள் கலமேறிச் சென்று தூர தேசங்களில் பிரபல வியாபாரம் செய்து வந்தார்கள். கைத்தொழிலினுள் எப்படி நெசவுத்தொழில் மேம்பட்டதென்று சொல்ல இடமுண்டோ அப்படியே அறுவை வணிகம் (ஜவுளி வியாபாரம்) அக் காலத்தில் மிகவும் கௌரவத்தோடு நிலைபெற்றிருந்தது. வணிகம் என்ற சொல்லுக்கு யோகரூடியாக அறுவை வணிகத்தைத்தான் சொல்லவேண்டும். முற்கால வழக்கிது என்பதை ஆராய்ச்சிக்காரர்கள் எடுத்துக் கூறுகின்றனர்.

மேற்காட்டிய 'தொழிலும் வியாபாரமும்' என்ற தலையங்கத்தின் மேன்மையை விளக்கமாகக் கீழேகண்ட உபந்நியாசம் ஒன்றால் அறிக:—

"பண்டைக்காலத்து நம் தமிழ்நாட்டில் நம் மக்கள் மெசபொடோமியா, ரோம், கிரீஸ், ஜாவா, சுமத்திரா, பர்மா, ஜப்பான், சீனா முதலிய இடங்களுடன் பெருத்த வணிகம் செய்தனர் என்பதற்கு நம் தமிழ் நூல்களும், பெரிய ஆராய்ச்சிக் காரர்களும் சான்று பகர்கின்றனர். இவர்கள் இற்றைக்கு 10,000 ஆண்டுகட்கு முன்பே மெசபொடோமியாவுடன் வியாபாரம் செய்தார் என்பதற்கு அறிகுறியாய் மூகிர் என்ற பண்டைக்கால நகரொன்றைத் தோண்டிப் பார்க்குங்கால், மலையாளத் தேக்குமரத் துண்டொன்று காணப்பட்டதென்பர். அன்றியும் இந் நாட்டினின்றும் உவரி என்ற துறைமுக வாயிலான் சாலமனுக்கு மூன்று ஆண்டுகட்கு ஒருமுறை கப்பல்களின் வழியாய் மயில், பொன், அகில் சந்தன முதலிய கட்டைகள் இன்னும் பிறவும் சென்றதாய்ப் பைபில் கூறுகின்றது.

பண்டைக் காலத்து தமிழ் நாட்டில், பெருத்த துறைமுகங்களாய் இருந்தவை காவிரிப்பூம்பட்டினம், முசிறி, உவரி முதலியனவாம். ஒவ்வொரு துறைமுகத்தில் கலங்கரை விளக்கங்கள் (Ligt House) இருந்தன. அன்றியும் அக் காலத்து துறைமுகப் பட்டினங்களில் இருந்து கப்பலில் சாமான்களை ஏற்றியும் இறக்கியும் சுங்கம் வாங்கியும் வந்தனர். இவ்வுண்மை மிக அழகாய்ப் பட்டினப் பாலை யென்ற நூலில் எடுத்துரைக்கப்பட்டிருக்கின்றது. அக்

காலத்து இருந்த துறைமுகங்கள் இப்பொழுது இருப்பவைகளைக்காட்டினும் குறைந்தவையல்ல.

தமிழ் நாட்டில் பண்டைக்காலத்து மிகவும் சிறந்து விளங்கியது அறுவை வணிகமே. அறுவை வணிகம் என்பது துணி வியாபாரமெனப் பொருள்படும். அறுவை என்னும் சொல்லுக்கு இப்பொருள் கொண்டே,—

"நோக்குநுழை கல்லா நுண்மைய பூக்கனின்
தாவுரி யன்ன வறுவை நல்கி."

என்று பொருநராற்றுப்படையினும்,

"நீசில மொழியா வளவை மாசில்
காம்பு சொலித் தன்ன வறுவை யுடீஇப்"

என்று சிறுபாணாற்றுப்படையினும் வருதற் காண்க.

இத் துணிகள் நம் நாட்டில் மிகுதியாய் நம் பெண்மக்களால் நெய்யப்பட்டன. இத் தொழிலுக்குக் காருகவினையென்றும், தொழில் செய்யும் பெண் மக்கட்குக் காருக மடந்தையென்றும், தொழில் செய்வோர் இருக்கும் இடத்திற்குக் காருக நிருக்கை என்றும் பெயர். நம் நாட்டில் பருத்தி நூலாலும், பட்டாலும், எலி மயிராலும் ஆடைகள் பலதிறப்பட்டு பல நிறங்களுடன் நெய்யப்பட்டன. இவ்வாடைகளெல்லாம் மெசபொடோமியா முதலிய இடங்கட்குச் சென்றன. "சிந்து" எனப் பெயரிய மஸ்லின் ஒன்றே தமிழ்நாட்டுப் பெருமையைச் செவ்வன் விளக்கிற்று. தமிழ் நாட்டகத்து நெய்யப்பட்ட ஆடைகளெல்லாம் மிக நுண்ணியதாய் கண்டார் கண்ணைக் கவருவனவாய் இருந்தன. அன்றியும் 13 வது நூற்றாண்டுகளுக்கு முன் ஆடை நெய்யும் முறையே அறியாத சிங்கள நாட்டவருக்கு முதன் முதல் ஆடை நெய்யும் வழியைக் கற்பித்தது நம் தமிழ்நாட்டு மக்களே என்பதற்குத் தக்க ஆதாரங்கள் இருக்கின்றன. இவ்வுண்மையைச் சிங்களவர்களும் ஒப்புக் கொள்ளுகின்றனர்.

மற்றும் இங்கிருந்து உப்பும், பொன்னும், சந்தனமும், அகிலும், முத்தும், மிளகும் பிறநாடுகட்கு அனுப்பப்பட்டன. இந் நாட்டுப் பொருள்கள் பிறநாடுகளில் 100 மடங்கு மிகுதிப்பட்ட விலைகட்கு விற்கப்பட்டன.

தமிழர்கள் தாங்களே கப்பல் கட்டும் திறன் உடையவர்களாய் இருந்தனர். ஆகையினாற்றான் "கலம்புணர் மாக்கள்," "கலஞ்செய் கம்மியர்" முதலிய சொற்கள் நம் நூல்களில் காணப்படுகின்றன.



பிற நாடுகளிலே நின்றும் தமிழ் நாட்டிற்குக் குதிரைகளும், கண்ணாடிகளும், கர்ப்பூரமும், பித்தளைச் சாமான்களும், சாராயங்களும் இறக்குமதி செய்யப்பட்டன.

அக் காலத்து பிறநாடுகளுடன் வியாபாரம் செய்வோர் அரசரால் நன்கு மதிக்கப்பட்டு "எட்டி" முதலிய பட்டங்களும் பெற்றனர். இவ்வாறாக பெருஞ் சிறப்புடன் இருந்த தமிழ்நாடு மிகவும் இழிந்த நிலையில் இருத்தற்குக் காரணம் இது நம் நாடு, இது நம் மொழி என்ற பற்று நம்மவர்களுக்குள் இல்லாமையேயாகும்." அது நிற்க.

இனி, செங்குந்தருள் பெரும்பாலோர் செய்து போதரும் நெசவும், அந் நெசவுக்குரிய அறுவை வியாபாரமும் இக்காலமுறையில் பெரிதும் திருத்தமடையவேண்டும். செங்குந்தர் இவ்விரு தொழிலையும் பங்குத்தொகையில் வைத்துச் செய்து வருவார்களேயானால் அவர்கள் பொருளாதார நிலையில் சங்கடப்படமாட்டார்கள்; செங்குந்தருள் சிறிய முதலாளிகளும் முன்னுக்கு வந்து விடுவார்கள். இதைச் செங்குந்த குலாபிமானிகளும் அக்குலச் சீமான்களும் கவனிப்பது புகழும் புண்ணியமும் லாபமுமாக விருக்கும்.

---

# அறிவு

உயிர்க்குணங்கள் பலவற்றினும், அறிவு தலை சிறந்தது. அறிவு எல்லா உயிர்கட்குமுளது. புலன் ஐந்தாகலின், அறிவும் ஐவகையாகப் பகுக்கப்படும். புல், மரம் முதலியவை பரிசமாத்திரையறியும் ஓரறிவுயிர்கள். இப்பி, சங்கு முதலியவை. ஸ்பரிசம், ரசம் என்னும் இவற்றையறியுமீரறிவுயிர்கள் கறையான், எறும்பு முதலியவை. ஸ்பரிசம், ரசம், கந்தம் என்னும் இவற்றையறியும் மூவறிவுயிர்கள். தும்பி, வண்டு முதலியவை ஸ்பரிசம், ரசம், கந்தம், ரூபம் என்னும் இவற்றையறியும் நாலறிவுயிர்கள். தேவர், மனிதர், நாகர், விலங்கு, பறவை முதலியவை ஸ்பரிசம், ரசம், கந்தம், ரூபம், சத்தம் என்னும் இவற்றையறியும் ஐயறிவுயிர்கள்,

மனத்தானறியுமறிவு, இவற்றின் வேறெனக. இம் மனவறிவே மாக்களினின்று பிரித்து மக்களை அறிதற்குக் கருவியாயிருக்கின்றது. பொதுவறிவு, ஐம்புலவறிவு, சிறப்பறிவு. மனவறிவு, ஆவனவும், ஆகாதனவும் அறிய வல்லதிம் மனவறிவே. முற் பிறப்பிற் பயிற்சி வயத்தானே மனவறிவுமிக்கு இருப்பவர்கள் நூலறிவைப் பெற்றுற் பெரும் பயனெய்துவார். நூல்கள் பலவற்றைக் கசடறக் கற்றுக் கேட்டற்குரியவற்றை உரியார்வாய்க் கேட்டறிந்த செயற்கையறிவுடையவர்கட்கும், இயற்கையறிவாகிய இம் மனவறிவே வலியாதலுடைத்து. இயற்கையறிவு இலதேற் செயற்கை யறிவு சிறவாது.

"அறிவே யறங்கட்கொரு துணையாம், அறிவே குறைவில்பெருஞ்செல்வம்,
அறிவே யழியா இன்புதரும், அறிவே துன்பமுழு தழிக்கும்,
அறிவே யமாருலகேற்றும், அறிவே யுலகிற் புகழாக்கும்,
அறிவே பிறவா நெறியளிக்கும், அறிவே யிறைவன் வடிவாமே."

அறிவின் செய்கையாவது:—சிந்தையை நல்வழியிற் செலுத்துவது. எவ்வாறு குதிரை தானே வழியறிந்து செல்லாதோ அவ்வாறே மனமும் இடமறிந்து செல்லாது. அக் குதிரையைப் பாகன் நிலமறிந்து செலுத்துவதுபோல, மனதைப் புலனறிந்து செலுத்த அறிவு வேண்டியது அவசியமாயிருக்கிறது. மனம்போன போக்கெல்லாம் போகக்கூடாது. மனத்தைப் போனபடி விட்டுவிட்டால் அதனால் வருங்கேட்டிற்கோ அளவில்லை. துன்பத்திற்கெல்லாம் விதையாவது, மனம் தீயவிஷயங்களிற் செல்லவிடுதலேயாகும். மனத்தை நல்ல விஷயங்களிற் செலுத்துவதே நன்மைக்குக் காரணமாம். நல்விஷயங்களிற் சிந்தையைச் செலுத்தற்கு அறிவைவிட வேறொரு குணத்தாலாகாது.

இவ்வறிவு ஒருவனுக்குச் சோர்வினால் வருந்துன்பத்தை முன்னே யறிந்து நீக்கிக்கொள்ளுதலால் இறுதிவராமற் காக்குங் கருவியாகவுள்ளது. மலை, காடு, நீர், மதில் என்னும் அரண்களுக்குள் இருக்குமரசனையும், பகைவர் அழித்துவிடுகின்றனர். இவ்வறிவாகிய அரணுக்குள் அமைந்து வாழும்மாருவனை எவ்வகைப்பட்ட பெரும்பகைவர்களும் இடர்செய்ய முடியாது. இவ்வகைச் சிறப்பினையுடைய அறிவைப் பெற்றவர்கள் அதனாற் செய்யவேண்டிய செய்கைகளைச் செய்துகொள்ளாது வீணே இருக்கின்றனர். இது விசனிக்கத் தகுந்ததே.



20434

அன்பும், அருளுமே அறிவுக்கு அடையாளமாம். ஒருவர்க்கு அன்புமருளும் இல்லையேல் அவரை அறிவில்லார் என்று [illegible]யின்றிச் சாற்றலாம்.

தொடர்புடையார் மாட்டு நிகழும் உள்ளநிகழ்ச்சி அன்பு தொடர்பு பற்றாது யாவரிடத்தும் உண்டாகும் இரக்கமே அருளாம். இவ்விரண்டிலும் அருளே சிறந்ததாம். எவ்வாறெனில், அன்பு, மனைவி, மக்கள் முதலிய தொடர்புடையவரிடம் காரணம் பற்றி உண்டாகும். அருள் ஒருகாரணமுமின்றி எல்லாவுயிர்களிடத்தும் உண்டாகும். நம்மிடம் அன்பு செய்பவரிடத்து மட்டும் நாம் அன்பு செய்வது சிறப்பன்று. ஒருவர் நமக்கு ஏதேனும் உதவி செய்வாராவென்று எதிர்பாராமல் இயல்பாக உண்டாகின்ற இரக்கத்திற்கு எதனை ஈடாக்கலாம். அருளே இறைவன் வடிவெனப்படும். அறிவுடையோர் இவ்வருளை மேற்கொள்ளாவிடின் ஒரு பிரயோசனமு மடையமாட்டார்கள். இதுபற்றியன்றோ நமது தெய்வப்புலமைத் திருவள்ளுவனார்,—

" அறிவினா லாகுவ துண்டோ பிறிதினோய்
தந்நோய்போற் போற்றாக் கடை." என்றனர்.

மனைவி மக்கள், சுற்றத்தார், நட்பினர் முதலியவர்களுக்கு மட்டும் தன்னாற்செய்யக்கூடிய நன்மைபுரிந்துவிடுவது அறிவன்று. ஏழையர், வியாதியாளர், உறுப்புக்குறைந்தோர் முதலியோர்க்கும் கூடிய நன்மை செய்யவேண்டும். விலங்கு, பறவை முதலிய அஃறிணை யுயிர்கட்கு நம்மாற் றுன்பம் வாராமற் காத்தலோடு அவை வேறொராற்றால் துன்பமுற்றபோது அத்துன்பத்தைப் பரிகரித்தற்கு முயற்சிக்க வேண்டுமென்றறிக. நாம் பெரும்பாலும் அஃறிணை யுயிர்களிடத்தே இரக்கமுறுதல் வேண்டுமென்பதற்கே நாயனாரும். மேற்படிகுறளில் "பிறர்கள் நோய்" அல்லது "பிறர் கோனோய்" என்றபடி வேறு ஏதேனும் பொருந்தினதொரு வாய்பாட்டால் உயர்திணையைக் குறித்துக்கூறாது" பிறிதின்நோய்" என்று அஃறிணையைக் குறிப்பித்தாரெனக.

இஃதறியாது சிலர் நம்மைப்போன்ற மனிதர்கட்குத் துன்பஞ்செய்யின் அரசதண்டம் முதலியவை உண்டென்றொழிந்து, கேள்வியற்றிருக்கிற உயிர்கள், மிருகம், பறவை முதலியவைகளே யென்றெண்ணி, அவற்றை இம்சை செய்வதும் அடிப்

பதும், வண்டி முதலியவற்றிற் கட்டி அதிகபாரம் வைத்து இழுக்கச்செய்து தாற்றுக்கோல் முதலியவற்றாற் குற்றுவதும் செய்கின்றனர். சிலர் விலங்குகளைக் கொன்று அவற்றின் புன் மலந் தங்கிய குடர்களையும், மூளைகளையும், எலும்புகளையும், விடாமல் இரையாக்கிக் கொள்கின்றனர். சில பறவைகளையும் துடிக்கத் துடிக்கத்துப்பாக்கியினாற் சுட்டுத் தோட்டையில்கொண்டு வந்து தோற்பையில் நிரப்புகின்றனர். தங்களை ஒருவர் துன் பஞ் செய்தால் எத்தனை கோபம், எத்தனை வழக்குகள், எத்தனை கலகம் விளைக்கின்றனர். பிறிதொரு ஜீவனைத் தாங்கள் வதைத்து விட்டு அதன் விதி இப்படி இருந்தது என்று சமாதானம் சொல்லு கின்றனரே. இஃதென்ன அறியாமை. தங்கட்குப் பிறவுயிர்க ளாற் றுன்பம் வந்தபோது நமது விதி இப்படி இருந்ததென்று பொறுத்துக்கொண்டு சும்மா இருந்து விடுவார்களோ? பிறி தோருயிரைக் கொன்று தின்று மகிழ்கின்ற இவர்கள் மனம் இரும்போ—மரமோ—கல்லோ யாதோ அறிகிலம்.

விலங்கு பறவை முதலியவை கேள்வியற்றிருக்கின்றன என் றெண்ணல் பழுது. அங்கு இங்கு எனாதபடி எங்கு முளனும் இறைவன் ஒருவனுளன். அவ்விறைவனே எல்லா உயிர் வர்க்கங் கட்கும் ஏகசக்ராதிபதி. அப் பெருமான் அவர்கள் செய்யும் தீச் செய்கைகட்குத் தவறாது தகுந்த தண்டம் புரிவிப்பன். "நோயெல் லாம் நோய் செய்தவர் மேலவாம்" அன்றோ இதுநிற்க.

சிலர் தாம் செல்வமுற்றிருந்தபோது தமது சுற்றத்தார் கட் டோர் முதலியவர்கள் வறுமையினால் துன்புறுவது கண்டிருந்தும் வாளா இருந்து விடுகின்றனர். தாமட்டும் உண்டுடுத்து வாழ்தல் போதுமென்று நினைக்கின்றனர். அவர் செய்வது அது மட்டுமோ, தம்மோடு யாதொரு சம்பந்தமும் இல்லாத பிறர்க்குப் பல பொருள்களைக் கொடுத்து உபசரிக்கின்றனர். அதனால் அவர்கள் கருத்துப் பெருமை பெறலாமென்பதே. ஆனால், சுற்றத்தார் முதலியோரை நீக்கிச் செய்கிற இதனால் சிறுமையே யன்றிப் பெருமை சிறிதும் இன்று. அறிவில்லாதவன் பெருஞ்செல்வ மடையின் அதனால், அன்னியர் எல்லாப் பயனுமெய்து வாரே அன்றி, அவனது சுற்றத்தார் முதலியோர் உணவும் பெறாது பசித் துன்பம் அடைவர் என்று பெரியோர் கூறுவது வீண் அல்ல.



அஃது உண்மையேயென்று உதாரணங் காட்டுகின்றனர். சிலர், தாமும் தம்மைச்சேர்ந்த சுற்றத்தார்களுமே சௌக்கிய முற்றிருந் தாற் போதுமென்றெண்ணி அன்னியர்கட்கு அணுவளவும் உப கரித்தலை ஒழிந்திருக்கின்றனர். அதுவும் அறிவன்று. வறுமை மிகுதியால் உபகரிக்காவிடின், அது குற்றமன்று. தம்மால் பிறருக் குத் தீங்கு நேரிடாமற் செய்து கொண்டால் அவர்களும் அறி வுடையவர்களே யாவர்.

இனி, சத்துவம், இராசதம், தாமதம் என்ற முக்குணங்க ளும் மாறிவந்துகொண்டே யிருத்தல் யாவரிடத்தும் நிகழ்வதால், உயர்ந்த பொருள் இழிந்தார்வாயினும், இழிந்த பொருள் உயர்ந் தார் வாயினும், உறுதிப்பொருள் பகைவர் வாயினும், கெடு பொருள் நட்பினர் வாயினும் ஒவ்வோர் காலத்துண்டாகின்றமை யால் சொல்வாரதியல்பு நோக்காது அப்பொருளின் பயனைக்கி அறிவுடையார் கொள்ளல் வேண்டும். கூறுவார் கூற்றுக்களில் ஒழிக்கப்படுமவற்றை ஒழித்தல் வேண்டும். இதுவும் அறிவின் செய்கையாம். "ஊக்கமுளதேற் சிறுவரையுங் கொள்க - ஒழிக் கது அயனுரை செயினுந் திரணம் ஒப்ப - ஏகவிடுவாய்" என்றும் பெரியோர் கூறினர்.

இன்னும் அறிவுள்ளோர் தாம் பிறர்க்கு ஒன்றை அறிவிக்கப் புகுங்கால் அது அறிய பொருளாயினும் எளிய பொருளாயினும் கேட்போர் மனத்திற் கொள்ளும்படி விளங்கச் சொல்லுவர். பிறர் வாய்ச்சொற்கள் வழுவுடையவேனும் இனிது விளங்காவாயினும் அவற்றின் நுண்ணிய பொருள்களைக் காண வல்லவராவர். உயர்ந் தோரையெல்லாம் நட்பாக்குவதும் இவ்வறிவேயாம். "அறிவுடை யொருவரை அரசனும் விரும்புவன்". அந்நட்பின்கண்ணே முன் விரிவதும் பின் குவிதலுமின்றி என்றும் ஒரு தன்மையே இருத்தல் வேண்டும். செல்வம் வந்த காலத்தில் மகிழ்தலும் வறுமை வந்தகாலத்து வாடுதலும் அறிவின் செய்கையே அன்று.

"உடைமையும் வறுமையும் ஒருவழி நில்லா."

என்ற ஆன்றோருரையை ஆராயவேண்டும்.

" கீத மழன் முதல வற்றின் செயல் கேட்கில் நித்தமாய்ப்
போதலொடு வருவது மாயிருக்குமவை பொறுநீயும்

ஆதலினென் பயனென்னி லவைபொறுத்த பெரியோனை
ஏதமவை நிலை கலக்காவவன் வீடே யெய்துமால்."

என்று கூறியபடி, சுகதுக்கம் வரும்போது கலங்காது பொறுத்துக்கொண்டிருத்தல் வேண்டும். இதுவே அறிவின் பெரும்பயன்.

ஒருவன் தான் நினைத்தவாறே ஒழுகிற் பழியும் பாவமும் வருமாகலான் அவ்வாறொழுகாது, உயர்ந்தோர் யாதொரு வாற்றான் ஒழுகினாரென்றறிந்து அவ்வாற்றான் ஒழுகல் வேண்டும். அவ்வொழுக்கமே புகழும் புண்ணியமும் உண்டாக்கும். நிற்க.

தமக்கு வரப்பட்ட நன்மை தீமைகளை முன்னே யெண்ணியறிதல் வேண்டும். வந்தாலறிதல் அறிவின் செய்கை யன்று. இன்னும் அஞ்சவேண்டியவற்றிற்கு அஞ்சுதலும் அறிவின் செயலாம். அஞ்சவேண்டியவற்றிற்கு அஞ்சாமை அறிவின்மையே. பழி, பாவம், கேடு முதலியவற்றிற்கே அஞ்சல் வேண்டும்.

தமக்கு வருந்துன்பத்தை முன்னே யெண்ணியறிந்து அதன் காரணத்தைத் தங்கண்ணிருந்து விலக்குகின்றவர்கட்கு யாதொரு துன்பமும் வாராமையால் அவர் எப்போதும் இன்பமே யெய்துவர். நிற்க.

செல்வமே எல்லா இன்பங்களையுந் தருமேனும் அது அறிவில்லார் இடத்துளதேல் அழிவெய்தும். அச்செல்வமழியாமற் காத்தற்கும் அழிந்த காலத்து விருத்தி செய்தற்கும் அறிவில்லார்க்குக் கூடாதாகையால், அறிவுடையார்க்கே செல்வத்தைக் காக்கவும் படைக்கவுங் கூடுமான காரியமாம். இதுபற்றி யன்றே நாயனாரும்,—

"அறிவுடையா ரெல்லா முடையா ரறிவிலார்
என்னுடைய ரேனு மிலர்."

என்று கூறித் தெளிவித்தாரென்க. சாதி சமயப் பற்றும் மிக்கு இருக்கவேண்டும்.

**வீ. துரைசாமி**

---



# ஓர் நல்லறிக்கை

அன்புள்ள நண்பீர்! நமது செங்குந்த மக்கள் பெருமை எல்லாம் அன்னியர்களுக்கு அயிக்கியமுள்ள கூட்டம் என்றும், இரக்கம் உள்ள கூட்டம் என்றும், தெய்வ பக்தியுள்ள கூட்டம் என்றும், பாராட்டத்தக்கனவாய் இருப்பதொழிய உண்மையில் ஒரு சிறிதும் இல்லையென்றே உறுதியாய்ச் சொல்லலாம். ஏனெனில் நமக்குள் ஒற்றுமை யிருக்குமாயின் நமக்குள் நேரும் விவாதங்களையும் விவகாரங்களையும் நாமே சரிப்படுத்திக்கொண்டு நமக்குரிய தன்மையை நாடாமல் அரசாங்க வாயிலாகவன்றோ நாடுகின்றோம். இது எத்தகைய பேதைமை. இன்னும் கூர்ந்துநோக்குங்கால் நம்மக்களை இளம்பருவத்தில் கல்வி பயிலவிடாமல் அற்ப ஊதியத்திற்கு ஆசைப்பட்டு வாழ்நாள் முழுவதையும் பதினைந்து அல்லது இருபது வெண்பொற் காசுக்கு அடிமைப் படுத்திக் கொள்ளுகின்றோம். அந்தோ! இது என்ன பரிதாபம். இம்மக்கள் வாழ்நாள் எல்லாம் இவ்வளவு தானா விலைபெறும்? இது மட்டுமா வியாபார முறையை சற்று கவனிப்போம். ஒருவர் ஒரு தொழின் முறையைக் காப்பாற்றிச் சொற்ப ஊதியம் பெறுவாராயின் மற்றொருவர் வேறு தொழின்முறையைக் கையாடாமல் ஆடுகள் ஒன்றன்பின் ஒன்று செல்வதுபோல ஒற்றுமையைத் தொழின் முறையில் காட்டித் தங்களைத் தாங்களே கெடுத்துக்கொள்ளுகிறார்கள். இது இவ்வாறு நிற்க.

இம்மக்கள் வாழும் ஒவ்வொரு நாடுநகரங்களிலும் குறைந்த பட்சம் வினாயகர் கோயிலாவது இல்லாமல் இருப்பதில்லை. "கோவிலில்லாவூரில் குடியிருக்க வேண்டாம்" என்னும் முதுமொழிக்கிலக்காயும் "திருக்கோவிலில்லாத திருவிலூர்—அடவி காடு" என்று நமது அப்பர் சுவாமிகள் கூறிய அரிய வாக்கைக் கடைப்பிடித்தும் தாங்கள் வாழும் இடங்களிலெல்லாம் தேவாலயம் நிறம்ப பெற்றனவாய் விளங்கி வருகின்றன. இத்தகைய தேவாலயங்களைச் செவ்வனே நடத்துவதற்காகத் தங்களுக்குள் வரி விதித்துத் தாங்களே வசூல் செய்து தேவாலய நித்தியநைமித்தியங்களைக் குறைவின்றி நடத்தி வருகின்றார்கள். கோயிலுக்குப் பொருள் சேர்ப்பதிலும் கோயிலை விருத்தி செய்வதிலும் சமர்த்தர்கள். ஒருவன் கோயிலுக்குக் கொடுக்கவேண்டிய வரியைக்கொடா

தொழிவாளுயின் எல்லாரும் குழிமி ஒற்றுமையாய் இருந்து அவனால் கொடுபடவேண்டிய வரியைக் கட்டாயப்படுத்தி வாங்கிவிடுவார்கள். இன்னும் கலியாண காலத்தில் மகட்கொண்டாரும் மகட்கொடுத்தாருமாகிய இருபாலரிடத்திலும் தாங்கள் அக் கலியாண மகோற்சவத்திற்குச் சான்றாய் நின்று நடத்தினமைக்குச் சொற்ப பொருளைப்பெற்று அப் பொருளைப் பொது நன்மைக்கென்று சேமித்து வருகின்றார்கள். இவர்கள் வாழும் ஒவ்வொரு ஊரிலும் சமுதாய தோப்புக்களும் தோட்டங்களும் நிலங்களு மிருக்கின்றன. இவற்றினின்றும் ஏராளமான வருவாயும் இருக்கின்றன. இவ்வருவாய் எல்லாம் முற்கால தற்காலங்களில் எவ்வாறு பயன்படுகின்றன என்பதை நான் கூறாமலே உபயோகப்படுத்தும் சகோதரர்களுக்கு நன்றாய்த் தெரியும். ஆதலால் உபயோக விவரத்தை விவரிக்காமல் விடுகின்றேன். எது எவ்வாறாயினும் நமக்குள் ஒற்றுமை என்பது இல்லையென்று கூற முன்வருவோர் வாயின் நாவானது மேல் வாயோடு ஒட்டிக்கொள்ளும் என்பதில் ஐயமில்லை. இத்தகைய ஒற்றுமை எல்லா மக்களும் வெகு பரபரப்புடன் முன்னேற்றம் அடைவதற்கு வெகு முயற்சி செய்து வருகின்றார்கள் என்று கண்டும் கேட்டும் வருகின்ற இத்தருணத்தில் மேற்கூறிய நம் ஒற்றுமை ஒற்றுமையாகாதென்று ஒதுக்கற்பாலதாயிருக்கின்றது. இவ்வளவு நாளாய் நாம் ஒற்றுமையாய் வாழ்ந்த வாழ்க்கையெல்லாம் தற்பொழுது பயன்பட்டிலதாய் காணப்படுகின்றன.

ஒவ்வொரு கூட்டத்திற்கும் இன்றியமையாதிருப்பது பொருளன்றோ "முனிவரு முன்னுப பொன்னால் முடியுமென" நமது மணிவாசகப் பெருமானாலும் ,விதந்து கூறப்படுவது பொருளன்றோ. அறம், பொருள், இன்பம் என மூன்றனுள் நடுவணதாய பொருள் ஒன்றே ஏனைய இரண்டையும் தரவல்லது என்று முற்றத்துறந்த முனிவர்கள் கூறியிருப்பாராயின் பொருள் மிக அவசியம் என்பதை வேறு சான்று காட்டி விளக்க வேண்டியதில்லை. எச்சாதி முன்னுக்கு வரவேண்டுமானாலும் எந்த கூட்டம் முன்னுக்கு வரவேண்டுமானாலும் அவசியமானது முன்கூறிய பொருள் என்றே மீண்டும் ஞாபகப்படுத்துகின்றேன்.

இவ்வாறாய பொருளை நாம் எப்படி பெறுவது? எப்படி முன்னேற்றமடைவது? என்பதே முக்கியமாய் ஆராயவேண்டிய நமது



முதற்கடமை. முதலாவது நாம் கூடும் ஒவ்வொரு கூட்டத்திலும் ஆராயவேண்டிய முக்கியமான விடயம் தொழில் முயற்சியாகும். இத் தொழிலை எவ்வெவ்வகையாய்ப் பிரித்து நடத்தினால் பேருதியங்கிடைக்குமென்பதைக் கவனிக்கவேண்டும்.

ஒவ்வொரு ஊரிலும் சமுதாய பொருளும் இன்னும் வேறு வகையில் வரும் பொருளும் சேர்த்துவைத்து அப் பொருளைப் போற்றி வட்டிக்கு விட்டு அவ் வட்டியைப் பொதுநன்மைக்குச் செலவிடுகின்றோமல்லவா. இத்தகைய நன்மைகளைச் செய்வதற்கு நாம் அடிக்கடி கூட்டம் சேர்கின்றோமே. அக் கூட்டத்தில் நாம் முன்னுக்கு வரவேண்டிய விஷயத்தையும் நம் மக்கள் கல்வி பெற்று முன்னுக்கு வரவேண்டிய நன்னோக்கத்தைப்பற்றியும் ஒரு சிறிதும் கவனிப்பதே இல்லை. ஆனால் முக்கியமாய் அக் கூட்டத்தில் கவனிக்கப்படுகிற விஷயம் ஒன்று உண்டு. அதாவது மோக்கத்தில் நோக்கம் உள்ளவர்களாய் அதற்குரிய புண்ணியத்தை வளர்க்கும் எண்ண முள்ளவர்களாய் அப் புண்ணியத்தை வளரப்பண்ணுவதில் யாரேனுந் தடையாய் இருந்தால் அவர்களை பலமாய் கண்டித்து அப் புண்ணியத்தை அடைவிப்பதில் நன்னோக்க முள்ளவர்களாய்ச் சண்டையிட்டு மண்டையை உடைத்தாவது எடுத்த காரியத்தை முடித்துக் கொள்வது தான் மேற் கூறிய ஒவ்வொரு கூட்டத்திலும் நடை பெற்று வருகின்றது. இதுதான் நம்மவர்கள் நன்னோக்கம் என்று தெரிகிறது. இன்னோக்கம் இவ்வாறு இருக்கவேண்டியதும் அவசியந்தான். ஆனாலும் இக்காரியம் ஒரு கூட்டம் முன்னுக்கு வரவேண்டிய விஷயத்தில் அவ்வளவு சிறப்புடைத்தன்று. நாம் முக்கியமாய் தற்பொழுது சவனிக்கற்பாலது தொழிலும் அத்தொழிலின் சீர்திருத்தமுமே. தொழிலைத் தாறுமாறாய் நடத்தித் தொழில் நாணயத்தைப் போக்கி சீர்கெட்ட நிலையில் வந்துகொண்டிருக்கின்றோம்.

சேலம் ஜில்லாவில் நெய்தற்றொழில் நாணயமாயும் மிக்க அழகாயும் நடைபெற்று வந்து பின்னர் சிறிது காலம் சீர்கெட்டு இப்பொழுது எல்லாரும் ஒன்று சேர்ந்து நாணயமாயும் சத்தியமாயும் நடத்த வேண்டுமென்றும் அப்படி நடவாமல் தவறி நடப்பவர்களுக்கு அபராதம் விதிப்பதாயும் தக்க ஏற்பாடு செய்துகொண்டு

இருப்பதாயும் கேள்விப்படுகின்றோம். ஆகையால் நாமும் அவ்வாறாய கூட்டம் சேர்த்து ஒவ்வொரு தெருவிலும் அல்லது ஒவ்வொரு ஊரிலும் தக்க முதல் வைத்து வியாபாரத்தை ஒழுங்கு பெற நடத்துவதற்குரிய உபாயத்தை அடிக்கடி யோசித்து விரைவில் செய்ய முயலவேண்டும். யோசித்தால் வாராதது ஒன்றும் இல்லை. ஒவ்வொரு தேசமும் யோசித்துத்தான் முன்னேற்றமடைந்து கொண்டு வருகின்றது. ஆகையால் நாமும் நன்கு யோசித்து நம்மக்களும் கல்வியறிவுபெற்று முன்னுக்கு வரவேண்டிய உபாயத்தை நாட ஊக்கத்தையும் உறுதியையும் பெற்று நன்மையையடைய எல்லாம் வல்ல முருகப் பெருமானை மனமார நினைத்து வாயார வாழ்த்துவோமாக. சுபம்!

வே. முத்துச்சாமி முதலியார்

---

# ஓர் வேண்டுகோள்

எல்லாம் வல்ல இறைவன் திருவருளால் இக் காலத்து மக்கள் தொகுதியாகிய பல்வேறு வகுப்பினரும் கால இயல்புக்கு ஏற்ற வாறு நடை உடை பாவனைகளை திருத்தி முன்னேற்றமடைந்து வருவது விரும்பத்தக்கதேயாகும்.

நமது மரபினரது நிலைமையை நோக்குமிடத்து பகீரென வயிற்றெரிச்சலை தரக்கூடியதாக இருக்கிறது.

இதற்குக் காரணம் யாதென நோக்குமிடத்து பல்வகையாக காணப்படினும் முக்கியமாக கல்வி இல்லாமை என்பதும் உலக நிகழ்ச்சி நிலைமையை நோக்காமையுமே யாகுமெனத் தோன்றுகிறது. ஆயின், நமது மரபினர் கல்விக்களஞ்சியங்களாக திகழவில்லையா? மன்னர்களாகவும் மாபெரும் வீரர்களாகவும் விளங்கவில்லையா? அருண்மிகுத்த அறிஞர்களாக திகழ்ந்திருந்ததில்லையா என கேள்விகள் நிகழலாம். முன்னர் இருந்தது உண்மையே. 'எங்கள் பாட்டனார் மாபெரும் புலவர், எனக்குத் தியாகம் கொடு' என்பதுபோல இருக்கிறது. ஆதலால் நமது முன்னோர் இருந்த உயர்நிலையை அடைவதற்கான வழியைத் தேடவேண்டுமேயொழிய எங்கள் பெரியார் உயர்நலமுடையோர் என்று கூறிக் கொண்டு வாளாயிருத்தலாகாது. இக் காலத்தில் நம்மவரில் பெரும்



பாலார் கல்வியாலும், செல்வத்திலும் ஒழுக்கத்திலும் குறைவு பெற்று முன்னேற்றமுற உதவி செய்வாரின்றி இருத்தலினால், நடை உடை பாவனைகளில் தவறுதலடைகின்றனர். அத்தகையாரை நல்வழிப்படுத்துவதை விடுத்து சில அறிஞர்களும் தனவான்களும் தயங்குவதுடன் தமது மரபையும் வெளியிட நாணுவதாகவும் அறிய வருகிறது. இது எவ்வளவு நலமெனக் கருதியோ அறியக்கூடவில்லை. இக் காலத்திலும் நம்மனோர் பலர் அறிவும் கல்வியும் பொருளும் அருளும் இல்லாது போகவில்லை. அத்தகையோர் கட்டுப்பாடாக முன்வந்து சமூக முன்னேற்றத்தை நாடி உழைப்பார்களாயின் அதிசீக்கிர காலத்திலேயே சீர்மிகப்பெருகக் கூடும். மேலும் தொன்றுதொட்டு தனித்தமிழ்மொழியில் கைக்கோளர் (கையினிடத்து கோல்தாங்கியவர் என்னும் பொருள் கொண்டு) என வழங்குவதை இழிவு எனக்கருதியோ அல்லது வேறு எக்காரணங்கொண்டோ பிறமொழியால் செங்குந்தர் என வழங்கவும்படுகிறது. மேலும் நமது மரபினர் எத்தகைய வறியவர்களாகக் காணப்படினும் தருமசிந்தையில் மட்டும் மாறுதலடைந்திருப்பதாக நினைக்கவும் இடந்தராது. அறிவிலும் உழைப்பிலும் ஒற்றுமையிலும் ஏனைய மரபினருக்குப் பிற்பட்டவர்களுமல்லர். அவர்களை ஊக்கம் காட்டி ஏற்றஉதவிசெய்து முன்கொணர்வோர் இல்லாமையே காரணமாகும். உலகிலுள்ள மக்கள் தொகுதிகள் எல்லாம் பேரூக்கத்துடன் எழுந்து முயற்சித்து வரும் இக்காலத்தில் நம்மனோர் 'யாருக்கென்ன அதுவதுவரும் காலத்தை வரும்.' என வாய் வேதாந்தம் கூறியிருப்பது அறமாகாது.

நமது மரபினர் கல்வி, செல்வம் முதலியவற்றில் நல்ல நிலைமை அரசாங்க நிர்வாகத்தில் பங்கிருந்தால் ஒழிய இம்மரபினர் முன்னேற்ற மடைதற்கு வழி உண்டாகாதென விளங்குகிறது. நமது நாட்டுச் சகோதரர் மகம்மதிய வகுப்பினர் முதலிய சில வகுப்புகள் தனியான பிரதிநிதித்துவம் பெற்று அதி சீக்கிர காலத்தில் எவ்வளவோ முன்னேற்றத்தை அடைந்துள்ளார் என்பது யாவரும் அறிந்த விஷயமே. புதிய சீர்திருத்தம் ஏற்பட்டுச் சுமார் 7. வருஷ காலமாகியும் நமது தொழிலைப்பற்றியாவது குழந்தைகளின் கல்வியைப்பற்றியாவது வறுமையால் படும் துன்பத்தைப்பற்றியாவது எந்த அரசாங்க ஸ்தாபனங்களிலும் கவனித்துப் பிரஸ்தாபித்தது உண்டோ என வினா நிகழின் இல்லை என்பதே விடை

வரும் என்பதும் அறிந்ததே இதுவும் நம்மவரின் ஊக்கமின்மையே என சொல்லக்கூடும்.

நமது மரபினர் கட்டுப்பாடாக ஜீவ காருண்யமாகிய பெருந் தருமத்தில் பல்லாயிரம் மக்களின் நன்மையை உத்தேசித்து எல்லாம் 'வரும் காலத்தில் வரும்' நம்மால் என்ன ஆகும் என்று நினைத்திராமல்,—

"முயற்சி திருவினையாக்கும் முயற்றின்மை
இன்மை புகுத்திவிடும்"

என்னும் தமிழ்மறை வாக்கியத்தை நினைவிற்குக் கொண்டு வந்து தூக்க நிலையிலுள்ள சமூகத்தை ஊக்கிவிடுதல் முதற் கடமையாகும். இதன் மூலம் சிற்றறிவினனாகிய நான் சில அபிப்பிராயங்களை இதன்கீழ்க் காட்டியுள்ளேன். அவற்றில் அறிஞர்கள் திருத்தியோ அல்லது மற்றும் அவர்களுக்குத் தோற்றும் படியான முறைகளை அமைத்தோ நமது மரபினரின் முன்னேற்றத்திற்கான முறைகளைத் தேடவேணுமாய்க் கேட்டுக்கொள்ளுகிறேன். என் சிற்றறிவுக்கெட்டிய அபிப்பிராயங்களாவன.

1. நமது தலைவர்களைக்கொண்டு நாடுகள் 72 - க்கும் திருமுகங்கள் அனுப்பிச் சிறுவர்களை கட்டாயப்படுத்தி ஆரம்பக்கல்வியில் திறமைபெறச் செய்தல்.

2. ஹைஸ்கூல்கள், தொழிற் கலாசாலைகள் ஆகியவற்றில் மாணவர்களைப் படிக்கத்தகுந்த பொருளுதவி (Sholor ship) மாதச்சம்பளம் முதலியவற்றிற்குப் பொருளீட்டவும் உதவி செய்யவும் ஒருகமிட்டி ஏற்பாடு செய்தல்.

3. நம்மவர் வசிக்கும் ஒவ்வொரு இடத்திலும் சமாசாரப் பத்திரிகைகளைத் தருவித்து உலக நிகழ்ச்சிகளை அறிவுறுத்தல்.

4. இக்கால நிலைமைக்கு ஏற்றவாறு தொழில் வர்த்தகம் முதலியவற்றைத் திருத்தி வறுமை நீங்கப் பொருளீட்டும் முறையை அநுசரித்தல்.

5. மற்றும் காலம், நிலைமை, உலக நிகழ்ச்சி ஆதிகளுக்குத் தக்கவாறு திட்டங்களைக் கையாளுதல்.



6. அரசாங்க நிலயங்களிலும் பொது ஸ்தாபனங்களிலும் நம்மவர் இடம்பெறவேண்டித் தக்கவழிகளை அடையச்செய்தல்.

7. நம்மவர் உள்ள ஒவ்வோரிடங்களிலும் குலமுன்னேற்றமடைவிக்கும் கழகங்களை ஏற்படுத்தல்.

8. கல்வி, தொழில் முதலியவற்றிற்காக பெருநாட்டார், கிளைநாட்டார் ஆகிய இவர்கள் சிறு தொகையான வரிகள் மூலமாகப் பொருள் சேகரம் செய்து மாணவர்களுக்கு உதவி செய்தல்.

9. அறிஞர்கள் நம்மவர் வசிக்கும் ஒவ்வோர் இடங்களுக்கும் சென்று அவ்வவ் விடங்களுக்கு ஏற்ற வகையால் நல்லறிவு புகட்டல்.—தொடரும்.

கா. உ. பொன்னுசாமி

குறிப்பு:—இக் கட்டுரையில் கைக்கோளர் என்ற சொல்லுக்குக் காணப்படுகிற உரை பொருத்தமாகத் தோன்றவில்லை. ஆனால், சில கல்வெட்டுகளில் கைக்கோலர் என்றும் காணப்படுகிறது. ஆராய்ந்து உண்மை காணவேண்டும். சேங்குந்தர் என்னும் காரணச் சிறப்புப் பெயர் கைக்கோளர்களுக்கு உண்மை என்பது நூலாட்சி பல கொண்டு அறியற்பாலது.—ஆசிரியர்.

---

## சைவசமய பரிபாலனம்

உலகத்திலேயுள்ள சமயங்கள் பலவற்றுள்ளுஞ் சிறந்த சமயமாய் விளங்குவது சைவசமயமே யாகும். இச் சமயமானது கடவுள். ஆன்மா, மலம், மாயை, கன்மம் என்னும் பொருள்களின் இயல்பை உள்ளதுள்ளவாறு "உள்ளங்கை நெல்லிக் கனிபோல" எடுத்து விளக்கும். எந்தச் சமயத்தின் கொள்கையும் சைவத்தின் சேர்பகுதியிலேயே யடங்கும். சைவத்தின் கொள்கையோ அவ்வாறடங்குவதன்று. சைவத்தில் அடங்காத ஒருண்மையை மற்றொரு சமயம் இன்று அரிதாகக் கண்டு கூறிற்று என்பதை நாம் ஒரு காலத்தும் அறிந்ததில்லை. மற்றச் சமயங்களிலே காணப்படாத உண்மைகள் பல சைவசமயத்திலே காணப்படுதலை நாம் பன்முறையு முணர்ந்திருக்கின்றோம். உதாரணமாக, இவ்வுலகிலுள்ள சமயங்களிலே சில பௌதிகமான உலகத்தை மாத்திரம்

ஏற்று மற்றவற்றை மறுக்கும். வேறு சில அவற்றோடு பூதகாரண மான சில தத்துவங்களையும் ஏற்று மற்றவற்றை மறுக்கும். வேறு சில அவற்றின் காரணமான தத்துவங்களையும், வேறு சில அவற்றோடு பிரகிருதியையும் ஏற்று மற்றவற்றை மறுக்கும். வேறு சில அவற்றோடு உலக காரணகர்த்தாக்களிற் சிலர் சிலரை ஏற்று மற்றவற்றை மறுக்கும். வேறு சில அவற்றோடு மாயையையும் அதன் காரணகர்த்தாக்களையும் ஏற்று மற்றவற்றை மறுக்கும். வேறு சில அவற்றோடு ஆணவமலத்தையும் சுத்த தத்துவங்களில் ஒவ்வொன்றனையும் அவற்றின் காரணகர்த்தர்களான அதிகார போகலய சிவ பேதங்களில் ஒவ்வொன்றனையும் ஏற்று ஏனையவற்றை மறுக்கும். வேறு சில அவற்றோடு முதல்வனது தடத்த நிலையே நிலையாகக்கொண்டு அமையும். சைவசமயமோ வெனில் இச் சமய பேதங்கள் கூறும் பொருளியல்புகள் யாவற்றையும் தன்னகத்தே கொண்டு இப் பௌதிக வுலகியல்பையும், இதன் காரண தத்துவங்கள் மாயைகள் என்னு மிவற்றின் தன்மைகளையும், கன்மம், மலம் என்னு மிவற்றின் நிலை வேறுபாடுகளையும், ஆன்மா, சிவம் என்னும் பொருள்களின் சொரூப தடத்த நிலைகளையும் உள்ள உள்ளவாறு விளக்கி அச் சமய பேதங்கள் யாவற்றினும் முதன்மை பெற்றுத் தான் ஒன்றே சித்தாந்தமெனப் புகழ நிற்கும். அதுபற்றி யல்லவா வேத சிவாகமங்கள் இதனைச் சித்தாந்தமெனக் கூறுவவாயின.

இதன் சமய நூலாயுள்ளன வேத சிவாகமங்களாம். இச் சமய நூற் பொருளைத் தூலாருந்ததி முறையாக எடுத்துக்காட்டும் நூல்கள் புராணாதிகளாம்.

ஏனைச் சமய ஆசிரியர்கள் மலச் சகிதராய்ப் பிறந்திறந் துழலும் உயிர்களுள் 'ஒருவர். சைவ சமய முதலாசிரியரோ பிறந்திறந் துழலாப் பெருவாழ்வுடைய பரம பதியாகிய சிவபெருமான்.

ஆதலினாலேயே உலகிலுள்ள சமயங்கள் யாவற்றினும் ஒப்புயர்வற்று விளங்குவது சைவசமயமே யென்பதற்கு யாதுந் தடையில்லை.

இவ்வளவு அருமையாகிய சமயம் நமக்கு வாய்த்திருந்தும் அதன் அருமை பெருமைகளை நாம் உணராமல் ஏனைச் சமயங்க



ளுள் ஒன்றுபோல அதனை மதிக்கின்றோம். அதுமட்டோ, ஏனைச் சமயங்களில் ஒவ்வொன்று நம்மறிவின் கண்ணை புகுந்து வேரூன்றுங் காலங்களிலே, சைவ சமயத்தினும் அவை மேம்பட்டன வென்னும் உணர்ச்சியும் நமக்கு உண்டாகி விடுகின்றது. அதனால், ஒரோர் காலங்களிலே அவற்றை மேன்மைப்படுத்தியும் சைவசமயத்தை இழிவுபடுத்தியும் உரையாடுகின்றோம். இதற்குக் காரணம் யாதெனில் நம்மவருள்ளே அநேகர் நிரம்பிய நூலுணர்வும் போதிய செல்வமும் வாய்க்கப் பெற்றிருந்தும் அபிமானம் இல்லாமையாற் போலும். சைவபரிபாலன முயற்சியிலே தலையிடாது அயர்ந்து நித்திரை போவாராயினர். அந்நிய சமய போதன நூல்கள் பல பாஷைகளிலும் அச்சிடப்பட்டும் ஆங்காங்கு தீவிரமாகப் போதிக்கப்பட்டும் அவ்வச் சமயங்களாலே வளர்க்கப்படுகின்றன. அதுபோல நம் சமய நூல்களும் போதனைகளும் நம்மவராலே விருத்தி செய்யப்படவில்லை. அதனால் அதன் அருமை பெருமைகளை நம்மவர் தாமும் அறிந்து நிலைபெருகக் கொள்ள வகையின்றி நாளடைவிலே கைவிடவுந் தலைப்படுகின்றனர்.

இதனை நம்மவருள்ளே அநேகர் கவனிப்பதில்லை. அதனால் "சைவமாஞ் சமயஞ் சாரும் ஊழ்பெற லரிது" என்றவாறு அரிதாகக் கிடைத்த நல்வினைப் பயனை அறிவு வேறுபாட்டால் இழந்து போகின்றார்கள்;

இப்படி நிலை திரியவருங் காலத்திலே யாவரும் நல்லறிவு பெற்று உய்யு நிமித்தம் நமது சைவசமய உண்மைகளை போதித்து நிலை நிறுத்தும் சைவபரிபாலனஞ் செய்ததற்கேற்ற இயல்பு எவரிடத்து அறிவின் வழியினாலாவது செல்வ வழியினாலாவது இருக்கின்றதோ அவர்கள் அந் நற்காரியத்தில் தலை நின்று செய்து அதனாலாய புண்ணியத்தைப் பெறுதல் வேண்டுமாகக் கடவுளை வேண்டுவோமாக.

ஓர் சைவசித்தாந்தி

குறிப்பு:—"தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம்" தற்போது கொண்டுள்ள நோக்க மெல்லாம் உலகப்போக்கில் சமத்துவம் அடைய வேண்டு மென்பதே. இப் பருவத்தில் வைதிக சம்பந்தமான வியாசங்கள் வேண்டற் பாலனவல்ல; கல்வி,

தொழில், வியாபாரம், வழக்கம், ஒழுக்கம், சரித்திரம், தேசியம் முதலானவைகளை அகத்தியம் வேண்டற்பாலன. பின் சிலபகல் தள்ளி சைவசித்தாந்தங்களும், பொருத்தமான புராணேதிகாசங் களும் தருக்கமுறையில் ஆராய்ச்சியுடன் வெளிப்படுத்துவதாக "சங்கத்தார்" நினைக்கின்றனர்.—ஆசிரியர்.

---

# கல்வியும் ஒற்றுமையும்

உலகத்திற் பிறந்த ஒவ்வொரு மக்களும் இகபர சாதனங்களை படையவேண்டியது, அவசியமாகலான் அவற்றை யடைவதற்கு இன்றியமையாததா யிருப்பது கல்வியேயாம். ஒருவன் பல துறைப் பட்ட கல்வியைப் பயின்றால் என்ன இலாபத்தை யடையலாமோ வெனின், அறிவு விளக்கம், புகழ், ஒழுக்கம், மேன்மை, சாது சங்கக்கூட்டுறவு, ஒற்றுமை என்னும் மனத்தூய்மை, தெய்வபக்தி ஆகிய, இவைகளை வெகு இலேசாக அடைய முடியும். கல்வி பயிலாதவன் எத்துணை உயர்குலத்துப் பிறந்தவனாயினும் மேற் கூறிய சாதனங்களைப் பெற முடியாதென்பதை,—

"கல்லா வொருவன் குலநலம் பேசுதல்
நெல்லினுட் பிறந்த பதரா கும்மே."

வெற்றி வேற்கை

என்னும் செய்யுளாலும் அநுபவத்தாலும் அறிந்து கொள்ளலாம். கற்றோர் உலகத்தில் அடைய முடியாத பொருள் ஒன்று மில்லை என்பதை,—

"உற்றுழி யுதவியு முறுபொருள் கொடுத்தும்
பிற்றைநிலை முனியாது கற்ற னன்றே
பிறப்போ ரன்ன வுடன்வயிற் றுள்ளுஞ்
சிறப்பின் பாலாற் றாயுமனந் திரியு
மொருகுடிப் பிறந்த பல்லோ ருள்ளு
மூத்தோன் வருக வென்னா தவரு
ளறிவுடை யோனா றரசுஞ் செல்லும்
வேற்றுமை தெரிந்த நாற்பா லுள்ளுங்
கீழ்ப்பா லொருவன் கற்பின்
மேற்பா லொருவனு மவன்கட் படுமே."



'தம்மாசிரியற்கு ஒருறுபாடுற்ற விடத்து அது தீர்த்தற்கு வந்து உதவியும் மிக்கபொருளைக் கொடுத்தும் வழிபாட்டு நிலைமையை வெறாது கற்றல் ஒருவற்கு அழகிது; அதற்கு என்னோ காரணமெனின், பிறப்பு ஒரு தன்மையாகிய ஒருவயிற்றுப் பிறந்தோருள்ளும் கல்வி விசேடத்தால் தாயும் மனம் வேறுபடும்; ஒரு குடியின்கட் பிறந்த பலருள்ளும் மூத்தோன் வருக வென்னாது அவருள் அறிவுடையோன் சென்றநெறியே அரசனுஞ் செல்லும்; வேறுபாடு தெரியப்பட்ட நாற்குலத்துள்ளும் கீழ்க் குலத்துள் ஒருவன் கற்பின் மேற்குலத்து ளொருவனும் இவன் கீழ்க் குலத்தானென்று பாராது கல்விப்பொருட்டு அவனிடத்தே சென்று வழிபடுவானாதலான்' என்பது புறநானூறு.

ஆகலின், கல்வியை, ஒவ்வொருவரும் விடா முயற்சியோடு கற்கத் துணிய வேண்டுவது இன்றியமையாத கடமையாம். கல்வி யென்னும் பதத்திற்கு 'அஞ்ஞானத்தைக் கல்லுதல்' என்பது திரண்டபொருள். ஒருவன் கல்வி கற்க எவ்வித முயற்சியைச் செய்து கற்கவேண்டுமோ அவ்விதம் கற்றல் வேண்டும். ஒருவனுக்குக் கல்வி யெத்துணைப் பயனைத் தருமென்பதைக் குமர குருபரசுவாமிகளும்,—

"கல்வியே கற்புடைப் பெண்டிரப் பெண்டிர்க்குச்
செல்வப் புதல்வனே யீர்ங்கவியாச்—சொல்வள
மல்லல் வெறுக்கையா மாணவை மண்ணுறுத்துஞ்
செல்வமு முண்டு சிலர்க்கு."

என்று கூறி யிருப்பதைக் கூர்ந்து நோக்கிக் கல்வியைக் கற்க வேண்டும். நாம் கற்கத் துணியாதிருப்பின் கல்வியில் முற்பட்டுள்ள மற்றை இனத்தவர் நம்மிடம் சமத்துவம் பாராட்டமாட்டார்கள் ஆகையால், நம் குலப்பிள்ளைகளுக்கு ஊக்கத்தோடு தமிழ்க் கல்வியையும், ஆங்கிலக் கல்வியையும் பயில்விப்பதற்கு எவ்வளவு முற்பட்டுழைக்க வேண்டுமோ அவ்வளவும் உழைப்பது சால வேண்டப்படுவதாகும்.

அவ்விதம் முயல வழிஇன் நம் குலமக்கள் இன்னுங் கீழ் நிலையை யடைவரென்பது உண்மையாகும்.

ஆகவே, பெண்மக்களையும் கல்வியிற் பயில்விப்பது சாலச் சிறந்தது என்பதை அறிவிற் சிறந்தார் சிலர் நம் செங்குந்த மித்திரனில் வரைந்து இருப்பதை யானும் குறித்து எடுத்துரைப்பது மிகையாகுமென விடுக்கின்றேன்.

இனி, எதற்காகக் கல்வியைக் கற்றல் வேண்டுமென முதலில் எடுத்துரைத்தேனெனில், கீழ்க் கூறப்படும் ஒற்றுமை என்னும் மனத்தூய்மைக்குக் கல்விதான் முதற் காரணமாகையால் அதைக் குறித்து முதலில் சொல்ல நேர்ந்தது.

ஒற்றுமை யெவ்வாறு மனத்தூய்மையாம் என்பதைக் கூறி அதனை கூறுவேன்.

"அன்பிலா ரெல்லாந் தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு." என்பது திருக்குறள்

சுயநலமே வேற்றுமைக்கும் சுயநலமற்ற தன்மையாகிய அன்பே ஒற்றுமைக்குக் காரணங்களாகும். யாவுந் தனக்கே வேண்டு மென்னும் சுயநலமே பேராசையை யுண்டாக்கிப் பின் தான் விரும்பியவற்றிற்குத் தடையாய் நிற்கும். மற்றையோரிடத்து த்வேஷம் இகல் முதலியவற்றையும் உண்டாக்கி ஒற்றுமையைக் கெடுத்துவிடும். ஆகையால்; அறிவிற்சிறந்தோரெல்லாம் அன்பை நீருக்கு ஒப்பிட்டுள்ளார்கள். தனித்தனியே பிரிந்து கிடக்கும் மண்ணணுக்களை நீர் ஒற்றுமை படுத்துவது போல் சுயநலத்தால் தனித்தனி பிரிக்கப்பட்டுள்ள பல மக்களை ஒற்றுமை படுத்த வல்லது அன்பேயாகுமாதலால் மனத்திற் குடிகொண்டிருக்கும் சுயநலத்தின் காரணமாக பல தீக்குணங்கள் ஒழிந்தபொழுதே இறைவனும் படும் வலையாகியது அன்பு. அதை சிதம்பரம் இராமலிங்க சுவாமிகள்,—

" அன்பெனும் பிடியுள் அகப்படு மலையே "

என்றார். ஆகையால் அன்பு மனத்திற் குடிகொண்டு எல்லாரிடத்தும் ஒற்றுமை யுண்டாக்கிவிடும்.

" மனத்தொடு மனத்தினை மன்றப் பிணிக்கும்
கட்புல னாகாக் கனிவெனுங் கயிறு." சிறுநூற்றொகை

என்பதை கூர்ந்து நோக்கியே மனத்தூய்மை யடைந்தகாலத்தே ஒற்றுமை யுண்டாக்கிறதாகையால் ஒற்றுமை மனத்தூய்மை எனப்பெறுகிறது.

நமக்கு ஒற்றுமை யென்னும் மனத்தூய்மை அவ்வளவு உறுதியாக வேண்டப்படுவதா? என்னும் ஐயம் நிகழலாம்



அஃது எங்ஙனமெனில், நம்முடைய குடும்பத்தில் தாய், தந்தை, தமையன், தம்பி, மனைவி, மக்கள், சுற்றம் இவர்களிடத்தும் நம் மரபினரிடத்தும் ஒற்றுமை என்னும் மனத்தூய்மை யுடன் இருக்க வேண்டுமென்பது திரண்ட கருத்து. மேற்சொல்லிய இவர்களிடம் ஒற்றுமை என்னும் மனத்தூய்மையோ டில்லாவிட்டால் நம் குடும்பமும் நம் குலமும் எந்தக் காலத்திலும் முன்னேற்றமடைய முடியாது. நாம் யாவரிடத்தும் ஒற்றுமை என்னும் மனத்தூய்மையை வைக்காது புறக்கணிப்போமானால் யாவரும் நம்மை வெறுப்பார்களென்பது உண்மையல்லவா? நாம் யாவரிடத்தும் ஒற்றுமை எனும் மனத்தூய்மையைப் பாராட்டவேண்டுமெனுங் கருத்தமைய,—

"எவ்வுயிரு நீங்கா துறையிறை சிவனென்று
எவ்வுயிர்க்கு மன்பா யிரு."

என்று ஆன்றோர் கூறியிருப்பதைக் கூர்ந்து யோசிக்கவேண்டும். இன்னும் நாம் முன்னம்,—

" அறையி லாடிப் பின் அம்பலத்தாட வேண்டும்"

என்பது பழமொழி. மனைவி மக்களிடத்து ஒற்றுமை என்னும் மனத்தூய்மையைச் செலுத்தப் பழகிக் கொள்ளவேண்டும். நாம் நம் சமுதாயத்தாரிடத்து ஒற்றுமையாகிய மனத்தூய்மையை உண்டுபண்ணுவதற்கு நல்லறிவும் ஆற்றலும் உடைய தலைவர்கள் அடிக்கடி போதிக்க வேண்டுவது கல்வியும் ஒற்றுமையாகிய மனத்தூய்மையுமேயாம். யாம் மற்றப்படி சித்தாந்தமாவது வேதாந்தமாவது தனிப்பட போதிக்கப்படாமலே நம் கூட்டத்தவரிடத்து ஒற்றுமை யென்னும் மனத்தூய்மை நிலைத்திருக்குமானால் சித்தாந்தமும் வேதாந்தமும் தானே வந்தமையும் என்பது திண்ணம்.

நம்மரபினரிடத்து ஒற்றுமையாம் மனத்தூய்மை யில்லாததால் அடிக்கடி கட்சி பிரதி கட்சியும், நியாயத்தலவாதமும், ஆலயப் போரும் நிகழுவதால் தன் வயிற்றோன்றிய மக்களென்றும் தனையீன்றத் தாயென்றும் தன்னுடன் பிறந்தவரென்றும் தன் சுற்றமென்றுங் கருதாது, ஒருவருக்கொருவர் கடுமை கொண்டு உண்பது முதலான கலப்பும் நீங்கியிருப்பதை நம்மரபில் மிகுதியாகக் காணலாம். ஆகையால். ஒற்றுமை என்னும் மனத்தூய்

மையை யுயிரினும் ஓம்புதல் வேண்டும். அந்த ஒற்றுமை என்னும் மனத்தூய்மையை உண்டுபண்ணுவது யாதெனில் கல்வியே யாம் என்று கூறியுள்ளோம் அதற்குச் சாதகமாயுள்ளது பத்திரிகையே தான். ஆனதால் பத்திரிகையை நம் குலத்தவர்கள் யாவரும் இடைவிடாது படித்து வருவது அவசியமானதால் நம் குலத்தவர்க்கென தற்போது "சேங்குந்த மித்திரன்" என்னும் பத்திரிகை யொன்று இப்போது எழுந்து உலாப்போதருகின்றது அதை ஒவ்வொரும் வரவேற்று வாங்கி வாசிக்கவேண்டும். வாசிப்பதோடு நில்லாமல் வாங்காதவர்களையும் வாங்கி வாசிக்கும்படிச் செய்வது ஒவ்வொரு உண்மைச் செங்குந்த குல மக்களுக்கும் இன்றியமையாத கடமை யாகும். என்பதைத் தாழ்மையுடன் வற்புறுத்தலானேன்.

தி. அ. சண்முகம்

---

# மதிப்புரை

## 'மூவருலா'

"கோவையுலா அந்தாதிக் கொட்டக்கூத்தன்" என்று புகழப்பட்ட கவிச்சக்கரவர்த்தியாம் ஒட்டக்கூத்தர், சோழமன்னர்களாகிய விக்கிரமன், குலோத்துங்கன் இராசராசன் என்னும் மூவரைத் தனித்தனி தலைவராகக்கொண்டு பாடிய உலாக்கள் மூன்றும் 'மூவருலா' என வழங்கப் பெறுவன.

இப்போது உலகில் வழங்கிவரும் உலாக்களுள் காலத்தாலும் சங்கநூற்பொருளாலும் மேம்பட்டதும் சோழவரசர் சரித்திர ஆராய்ச்சிக்கு இன்றியமையாததுமான இவ் வுலாக்கள் மூன்றும் பல கையெழுத்துப் பிரதிகள் கொண்டு செவ்வன் ஆராய்ந்து சிறந்த அரும்பதக் குறிப்புகளுடன் சென்னை அடையாற்றுக் கல்லூரித் தமிழாசிரியர் பிரமஸ்ரீ அ. கோபாலையர் அவர்கள் ஒரு தொகுதியாக வெளிப்படுத்தி யிருக்கின்றனர். புத்தகத்தின் விலை அணா 10. கிடைக்குமிடம்:—"செந்தமிழ் மந்திரம்" புத்தகசாலை, பிராடீஸ் ரோடு, மயிலாப்பூர், சென்னை.

---



## 'புதுயுகம்'

இது உதயதிசை நக்ஷத்திர சபையின் தமிழ் மாதாந்தப் பத்திரிகை. சமரச சன்மார்க்கம் மிக எடுத்துப் போதிப்பது. பத்திரிகைக்கு விஷயமெழுதுவோர் எல்லோரும் ஆங்கிலப் பட்டதாரிகளாகப் பெரும்பாலும் காணப்படுகின்றனர். கிடைக்குமிடம்:—"புதுயுகம்" ஆபீஸ், ஈரோடு. சந்தா ரூபாய் ஒன்று.

## 'ஆரம்பாசிரியன்'

இது சென்னை மாகாண ஆரம்பாசிரியர் சங்கத்தின் மாதாந்தப் பத்திரிகை. இதனுள் ஆரம்பக் கல்வி, ஆரம்பப் பள்ளிக்குரிய போதனு முறைகள், ஆசிரியரின் குறைகள், அன்னார் முன்னேற்றம், ஆசிரியர் சங்கங்களின் கூட்டங்கள் முதலியவற்றை எளிய கட்டுரையால் எழுதப்படுகின்றன. கிடைக்குமிடம்:—"ஆரம்பாசிரியன்" ஆபீஸ், 200, தம்பு செட்டித் தெரு, சென்னை. வருஷ சந்தா ஒரு ரூபாய்.

## 'ஜெகன்மோகினி'

இது ஒரு மாதாந்தச் சஞ்சிகை. இதனுள் பெரும்பாலும் தற்காலப் போக்கில் எழுதப்படுகிற அரிய கட்டுக் கதைகள் பல காணப்படுகின்றன. அது பெண்மக்களால் வரையப்படுவதாகும். கிடைக்குமிடம்:—"ஜெகன்மோகினி" ஆபீஸ், திருவல்லிக்கேணி, சென்னை. வருஷ சந்தா ரூபாய். 1-6-0.

## 'ஆனந்த விகடன்'

இது பெயருக்கேற்றபடி மாதமாதம் பற்பல வேடிக்கையான பயன் தரக்கூடிய விஷயங்களைக்கொண்டு வெளி வருகிறது. கிடைக்குமிடம்:—"ஆனந்த விகடன்" ஆபீஸ், சௌக்கார்பேட்டை, சென்னை. வருஷ சந்தா ரூபாய் ஒன்று.

## 'ஆனந்த குணபோதினி'

இது கல்வி, தொழில், வியாபாரம் முதலான கட்டுரைகளைக் கொண்டு மாதந்தோறும் வெளிவருகிறது. கட்டுரைகள் நல்ல நடையில் இயன்றுள்ளன. இடையிடையே அரசாங்க விஷயங்களும் காணப்படுகின்றன. கிடைக்குமிடம்:—"ஆனந்த குணபோதினி" ஆபீஸ், சென்னை. வருஷ சந்தா ஒரு ரூபாய்.

## 'இந்தியத்தாய்'

இது ஒரு தேசிய மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை. இதனுள் சுகாதாரம், தேகப் பயிர்ச்சி, அரசநீதி, வாலிபக் கல்வி, செல்வ விருத்தி முதலான பற்பல கட்டுரைகள் எழுதப்பட்டு வருகின்றன. கிடைக்குமிடம்:—"இந்தியத்தாய்" ஆபீஸ், ஸ்ரீரங்கம். வருஷ சந்தா ஒரு ரூபாய்.

## 'நச்சினார்க்கினியன்'

இது திரிசிரபுரத்தினின்றும் வெளிவரும் மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை. இதனுள் இந்திய நாட்டின் மாட்சி, மருவி வழங்கும் சொற்களின் ஆராய்ச்சி, மாணவரின் கடமை, சில சங்க நூற்பாக்கள் குறிப்புரை, 'காமந்த நீதிசாரம்' தமிழ் மொழிபெயர்ப்பு, சங்க காலத் தமிழர் சமய நிலை முதலான அரும்பெரும் விஷயங்களெல்லாம் செவ்விய நடையில் கட்டுரைகளாகக் காணப்படுகிறது. கிடைக்குமிடம்—"நச்சினார்க்கினியன்" ஆபீஸ், திருச்சினாப்பள்ளி. வருஷ சந்தா ரூபாய் இரண்டு.

## 'தாஜுல் இஸ்லாம்'

இது ஈரோடிலிருந்து மாதந்தோறும் வெளிவருவது. இதனுள் இஸ்லாம் மார்க்க விஷயங்களையும், வியாபார விஷயங்களையும் அரசாங்க விஷயங்களையும், விவரமாகக் காட்டப்பட்ட கட்டுரைகள் பல எழுதப்பட்டு வருகின்றன. கிடைக்குமிடம்:—தாஜுல் இஸ்லாம்' ஆபீஸ், ஈரோடு. வருஷ சந்தா ரூபா இரண்டு.

## இரட்டையர் சரிதை

இது ஸ்ரீமான் சி. கு. நாராயணசாமி முதலியார் அவர்கள் எழுதியது. முதன்முதல் இரட்டையர் 'தெய்வீகவுலா' திருமயிலை சண்முகம் பிள்ளை அவர்களாற் பதிப்பிக்கப்பட்டபோது இரட்டையர் சரித்திரம் சுருக்கமாகவும் உண்மையாகவும் அதனுள் சேர்க்கப்பெற்றது. பிறகு சில வித்துவான்களால் வழக்கப்படி உள்ளதைத் திருத்தியும் இல்லதைக் கூட்டியும் பல பதிப்புக்கள் வெளியிடப்பட்டன. இப் பதிப்பில் பெரும்பாலும் அவ் விஷயங்களெல்லாம் நன்கு காட்டப்பட்டுள்ளது. புத்தகம் கிடைக்குமிடம்:—"சாரதா புத்தகசாலை" தாம்சன் வீதி, கோயமுத்தூர். விலை அணா எட்டு.



# கடிதங்கள்

## கும்பாபிஷேகம்

சோணாட்டுத் தெய்வத் திருப்பதியில் ஒன்றானதும், ஸ்ரீ ஞானசம்பந்தாதி சைவாதிபர் அற்புதப்பதிகச் சரித்திர சம்பந்தமானதும், எண்ணிறந்த மகிமாதிசய முகூர்த்தங்களை யுடையதுமான திருமருகல் என்னும் மங்களத் தலத்தில் புதுவதாக கோயில் கண்டமைக்கப்பெற்ற ஸ்ரீ சிவசுப்பிரமணியக் கடவுளுக்கு நாளது பிரபவ ஸு வைகாசி மீ 19உ புதவாரம் உதயாதி 2½-நாழிகைக்குள்ளாக மகா கும்பாபிஷேகம் நடைபெறும். அடியார்கள் எல்லாரும் வந்து தரிசித்து இகபர சுகங்களை எய்துவாராக.

இத்தலம் நன்னிலம் இரயிலடிக்கு நேர் கிழக்கில் 7-வது மைலில் உள்ளது. இக்கால வண்டிகளின் வசதியும் வேண்டுவார் வேண்டியபடி கிடைக்கும்.

திருமருகல் நாட்டார்

## ஸ்ரீ அருணகிரிநாத முனீந்திரர் குருபூசை

நிகழும் பிரபவ ஸு வைகாசி மீ 32உ (14-6-27) செவ்வாய்க் கிழமை நமது ஆசிரியர் திருப்புகழ் ஸ்ரீ அருணகிரிநாத முனீந்திரரது குருபூசை தினமாகிய உத்தராயணத்து ஆறும் பௌர்ணமி ஆதலால், அன்று காலை சைதாப்பேட்டை செங்குந்த கோட்டத்து ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலில் சகல மூர்த்திகளுக்கு அபிஷேகமும், பகல் அடியார்களுக்கு அன்னம் அளித்தலும், பிற்பகல் செஞ்சொற் பொழிவும், மாலை அருணகிரிநாதர் திருவீதி உலாவ வரும் காக்ஷியும் நடைபெறும்.

இக் கழகத்தார், இப்போது தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்க மேற்பார்வையில் பல ஆராய்ச்சி கொண்டு எழுதப்படுகிற "திருப்புகழூர் விஜயம்" என்னும் உரை நூலை அச்சிடுவார்கள்.

ஸ்ரீ அருணகிரி நாதர் கழகத்தார்

## திருஞான சம்பந்தர் திருநட்சத்திரம்

இவ் வைபவம் பிரபவ ஸு வைகாசி மீ 6உ வியாழக்கிழமை சோழசிங்கபுரம் செங்குந்தர் பெரிய வீதியிலுள்ள திருஞானசம்பந்த சுவாமிகள் மடாலயத்துள் நடைபெற்றது.

அப்போது தேவார திருவாசக திருப்புகழ் பாராயணச் சிவனடியார் திருக்கூட்டம் பல வந்திருந்தன. மாகேசுர பூஜையும் பிள்ளையார் பூஜையும் வெகு சிறப்பாகவே நடை பெற்றன.

இப்பால், அன்றிரவு பிள்ளையார் கோட்டத்தில் "காஞ்சி மகா நாட்டு வித்தியா பிரசாரகர்" ஸ்ரீலஸ்ரீ காஞ்சி நாகலிங்க முனிவர் அவர்கள் தலைமையின் கீழ் சைவப் புராணிகர் ஸ்ரீமான் தி. அ. சண்முக முதலியார் அவர்கள் ஆளுடைய பிள்ளையார் அற்புதச் சரிதையை சுருக்கமாகவும் அழகாகவும் பல மேற்கோள் கொண்டு உபந்நியாசம் செய்தனர்.

முடிவில், முனிவர் அவர்கள் உபந்நியாசத்தின் முக்கிய நோக்கங்களை விரிவாகவும் விளக்கமாகவும் எடுத்துரைத்து மங்கல ஒலியுடன் கூட்டத்தை வாயார வாழ்த்தி எழுந்தமர்ந்தனர்.

மடாலயத்தவர்

## மாப்பிள்ளை குப்பம் செங்குந்தர் மகாசபை

திசைநாட்டுத் தொந்திபுரம் கிளையில் தேலூர், காட்டூர், போலகம், நல்லாச்சேரி முதலான நான்கு நாடுகளுக்கு முதன்மையாயுள்ளன வென்றும், ஐந்து நாடு என்றும் வெகு நீண்டகாலமாகப் பெயர் பெற்றுள்ள மாப்பிள்ளைகுப்பம் நாட்டு செங்குந்தத் தலைவர் உயர் திருவாளர் K. L. இராமலிங்க முதலியார் அவர்களும், உபத் தலைவர்: உயர் திருவாளர் M. A. கோவிந்தசாமி முதலியார் அவர்களும், மற்றுமுள்ளவர்களின் நன்முயற்சியின்பேரில் சென்ற 14-5-27-ல் மாப்பிள்ளைகுப்பம் மாரியம்மன் கோயில் சன்னிதியில் மாலை 6-மணிக்கு 'செங்குந்தர் பொதுக்கூட்டம்' ஒன்று நடைபெற்றது. அது சமயம் திருமருகல், (Board school Headmaster) திருவாளர் S. சுப்பிரமணிய முதலியார் அவர்களால் கடவுள் வணக்கம் செய்த பிறகு சகோதரபாவம், ஒற்றுமை, நம் முற்கால தற்கால ஸ்திதிகள் என்ற விஷயங்களைப் பற்றியும், கல்வி, பத்திரிகைகள் வாசித்தல் முதலான நன்மைகளைப் பற்றியும் வெகு தெளிவாகப் பசுமரத் தாணிபோல் எல்லோருடைய மனத்திலும் நன்றாய்ப் பதியும்படி சுமார் இரண்டு மணி நேரம் வரையில் நீண்டதோர் உபந்நியாசம் செய்தார்கள்.

இப்பால், பிரதி அமாவாசைதோறும் மாலை 5-மணிக்கு சபை கூடுவதாக எல்லோராலும் ஏகமனதாய் தீர்மானிக்கப்பட்டது.



கூட்டத்தில் 8 பேர்கள் செங்குந்தமித்திரனுக்கு சந்தாதாரர்களாகச் சேர்ந்தார்கள். 8½-மணிக்கு வந்தனம் கூறி சபை இனிது கலைந்தது.

சா. சுந்தர முதலியார்,

காரியதரிசி.

---

## நமது வேண்டுகோள்

செங்குந்த குல சிகாமணிகாள்! உத்தம புருஷர்கள் அவதரித்து தத்தம் புகழை தாணியிற் பரவச் செய்யும் இப் பரத கண்டத்தில், குலாபிமானமே குவலயத்திற் சிறந்ததென அறிந்து தம் உடல் பொருள் ஆவி மூன்றையும் உவந்து அர்ப்பணம் செய்து அன்புப்பணிபூண்டு நம் மக்கள் முன்னேற்றமடைய உழைத்து வரும் நம் குல அவதார புருஷர்களாகிய குருஸ்ரீ காஞ்சி நாகலிங்க முனிவர் அவர்களும், ஸ்ரீமான் தி. நா. சபாபதி முதலியார் அவர்களும் செய்துவரும் பேருதவிக்கு யாம் எஞ்ஞான்றும் நன்றி பாராட்டக் கடமைப்பட்டுள்ளோமன்றோ? ஆனல்,—

"செய்யாமற் செய்த உதவிக்கு வையகமும்
வானகமு மாற்ற லரிது."

என்ற தமிழ் மறையின்படி யாம் அவர்களுக்கு என்ன கைம்மாறு செய்யவல்லோம். மெய் வருத்தம் பாராமல் பொருள் செலவை நோக்காமல் அரும் பெரும் முயற்சி செய்து புராதன கல்வெட்டு, செப்பேடு, ஏட்டுப்பிரதி முதலானவைகளை ஆராய்ச்சி செய்து பண்டிதர் முதல் பாமரர் ஈறாக வாசித்துணரும்படி திரட்டியருளிய, செங்குந்த பிரபந்தத் திரட்டை, குலாபிமானிகள் அறியாதாரொருவரிரா ரென்றே நம்புகிறோம். அப் பிரபந்தத்தின் விளக்கத்தை இன்னும் தெளிவாக எடுத்துரைப்பதற்காகவும் அதை நாம் வாசாஞானத்தோடு நிறுத்திவிடாமல் அதன் பெருமைகளை நோக்கி தற்காலப் போக்கை அநுசரித்து நாம் முன்னேற்றமடைய வேண்டிய இன்னும் இதர விஷயங்களையும் அடிக்கடி தூண்டுதல் செய்வதற்காகவும் இச் "செங்குந்த மித்திரன்" வெளியாய் இருக்கின்றதென்பது கற்றுணர்ந் தடங்கிய கல்வியாளர்களனைவரும் அறிந்ததொன்றும். இப் பத்திரிகை பொருள் நோக்கத்தைக் கருதாத

பரோபகாரத்தை நோக்கி வெளியிடுவதென்றுரைப்பது மிகையாகாது. ஆனால், கண்டதே காட்சி, கொண்டதே கோலம், மரணமே முக்தி, மறு ஜென்மமே நாஸ்தி என்று விபரீத ஞானம் பேசிக்கொண்டு திரியும் சில வன்கண்ணர்கள், பரோபகாரத்திற்காக பாடுபடுவது உண்மையென்றால் அவர்களுடைய சொந்த பொருள்களையல்லவா சிலவு செய்யவேண்டும்.........என்று வாய் கூசாது கூறுகின்றார்கள் என்னே இவர்களின் மந்தமதி சென்றவாறு. இத்தகைய பேரறிவாளர்கள் சஞ்சரிக்கும் வரையில் நம் குலம் எக்காலம் முன்னேற்றமடைய போகின்றனவோ,—

> "ஆற்ற லுடையார்க்கும் ஆகா தளவின்றி
> ஏற்ற கருமஞ் செயல்."

என ஞான மூதாட்டியாம் நமது ஔவைப் பிராட்டியார் கூறி இருந்தும் இவ் விஷயங்களுக்குப் பொருள் சிலவு செய்து வரும் ஸ்ரீமான் தி. நா. சபாபதி முதலியார் அவர்களின் அருங் கைங்கர்யத்தையும், தன் சகோதரனின் மன நோக்கத்திற்கு மாறுபடாது மேன்மேலும் ஊக்கம் பெருகுமாறு அவர்களுடைய செய்கைகளை ஆதரித்துவரும் ஸ்ரீமான் தி. க. ச. கலியாண சுந்தர முதலியார் அவர்களின் பெருந்தகைமையையும் உற்றுநோக்குங்கால்,—

> "ஊருணி நீர்நிறைந் தற்றே யுலகவாம்
> பேரறி வாளன் றிரு."

என்ற தெய்வப்புலமைத் திருவள்ளுவரின் அருள்மொழிக்கு இலக்காயன்றோ தோன்றுகிறது. ஆகையால், பெரியோர்களே! இச்சமயம் தவறினால் மறுசமயம் வாய்ப்பதரிது. காற்றுள்ள போதே தூற்றிக்கொள்ள வேண்டாமா? அருமையதாகியும் இன்னும் நாம் நித்திரையில் இருக்கலாகுமா? இதற்காக நாம் பெரும் நிதி சேகரிக்க இயலாவிட்டாலும் சந்தாதாரர்களாகவாவது சேரக்கூடாதா? நம்முடைய வருமானத்தில் மாதம் 2 அணா இதற்கு நன்கொடையைப்போல் அளிப்பதால் நமக்கென்ன குறைவு. சுருட்டு பீடி சிகரெட்டு முதலிய லாகிரி வஸ்துக்களிற் சிலவு செய்யும் தொகையில் தினம் ஒன்றுக்கு முக்கால் பைசா விழுக்காடு சேமித்தால் நம்முடைய வேண்டுகோள் நிறைவேறி விடுமே. குலாபிமானிகளென்று மதித்து அவர்களுக்கு பத்திரிகையை அனுப்பினால் இரண்டணா காசுக்குப் பின்னடைந்து அதை திருப்பி விடுவது தான் அவர்களின் பெருந்தகைமைக்கு அழகு போலும்? இவர்களுக்கெல்லாம் எடுத்துரைக்க நாம் அருகரல்லோம். செங்குந்த சீலர்களே! தலைவர்களுக்கு மனத்தளர்ச்சியை உண்டு பண்ணாதீர்கள். சென்ற மித்திரனில் 'வேண்டுகோள்' என்ற தலையங்கத்தின் கீழ் கனம் பதிப்பாளர் அவர்கள் வரைந்திருந்த வியாசத்தை முற்றும் கவனித்திருப்பீர்கள். அதைப் பற்றி விரிக்கின் மிகையாகும். இறுதியாக நம்முடைய வேண்டுகோளாவது செங்குந்த குலசிகாமணிகள் ஒவ்வொருவர்களும் நம் மித்திரனுக்குச்சந்தாதாரர்களாய் சேர வேண்டுமென்றும், இன்னும் நம் பந்து மித்திரர்களையும் அவ்வாறே சேர்ப்பிக்க வேண்டுமென்றும், அப்படி சேர்ந்தவர்களின் தொகையை கிராமத்திற்கு இரண்டொருவர் முயற்சியால் வசூலித்தும் முன்பணமாக அனுப்பவேண்டுமென்றும், கூடிய சீக்கிரத்தில் மித்திரனை வார வெளியீடாக்க வேண்டுமென்று கனம் பதிப்பாளர்களைக் கேட்டுக்கொள்ளவேண்டுமென்றும், மித்திரனில் வெளிவரும் விஷயங்களை வாசித்து அதன்படி ஒழுகவேண்டுமென்றும், அறிவு ஆற்றல் ஆண்டுகளிற் கடையேனின் புன்மொழிகளிற் பொலிந்து கிடக்கும் குற்றங்களை நீக்கி குணங்களைக் கிரகித்துக்கொள்ளுமாறும் வணக்கமாய்க் கேட்டுக் கொள்வதோடு, இம் மித்திரன் நீடூழி காலம் நிறைவெய்தி வரும்படிக்கும் தலைவர்களுக்கு இன்னும் பரந்த கல்வியும் விரிந்த ஞானமும் செறிந்த செல்வமும் நிறைந்த ஆயுளும் அருள்புரியுமாறு ஸ்ரீ ஷண்முகானந்தன் சரண கமலங்களை மனமொழி மெய்களாற் வாழ்த்துகின்றோம்.

சி. தி. தாண்டவராயன்,

திருமருகல், } காரியதரிசி.

ஸ்ரீ சண்முகானந்த சன்மார்க்க சபை. }

## அறிவிப்பு

சென்ற வாரத்திலோர் நிமித்தமாக நான் யாழ்ப்பாணஞ் சென்றிருந்தேன். அங்கே நல்லூர் என்னுமிடத்திலிருக்கும் நம்மவராகிய சுந்தரமுதலியார் அவர்களுடைய வீட்டில் "செங்குந்த மித்திரன்" என்னுமோர் மாதாந்தப் பத்திரிகையைக்கண்டு அதை யெடுத்து வாசித்துப்பார்த்தேன்.

நம்மனோர் சோழ ராஜர்கள் அரசுபுரியும் காலத்தில் கிரிதீபம் போல் விளங்கப்பெற்று காலகெதியால் மாறுகொண்டமை.........

.....................................................................

நீக்கி மேனிலைக்குக் கொண்டு வருவதே முழு நோக்கமாகச் "செங்குந்தமித்திரன்" கங்கணங்கட்டி எழுந்து நிற்பதைப் பார்க்கப்பார்க்க அடியேனுக் குளதாகுகின்ற இறும்பூதிற் கெல்லையோ இல்லை! இல்லை!!

அதனால் மேற்படி பத்திரிகையின் நோக்கத்தையும் நம்மனோரை மேனிலைக்குக் கொண்டு வருவதற்காக முன் வந்திருக்கும் பெருமக்களுடைய தன்மையையும் பற்றி சென்ற (20-4-27) புதன்கிழமையில் அன்று நமது குறிச்சியில் கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் மாரியம்மன் சந்நிதியில் செங்குந்த குல சபை கூட்டி ஓர் உபந்நியாசம் செய்து செங்குந்த மித்திரனை நம்மனோரெல்லாம் பூரண அன்பினோடு ஆதரித்துப் போற்ற வேண்டுமென்று வற்புறுத்திக் கூறினேன். அச்சமயத்தில் ஷை மித்திரனை ஆதரிப்பதாக முன் வந்தோரில் சிலருடைய விலாசம் அடியிற் குறிக்கப்பட்டிருக்கின்றது. அவ்வவ் விலாசங்களுக்கு மித்திரனை V. P. P. மூலமனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்கின்றேன். பத்திரிகையனுப்பப்படும்போது ஒவ்வொருவருக்கும் 1-ம் சஞ்சிகையையும் அனுப்பிவைக்க வேண்டியது.

எமது விலாசத்திக்கு மித்திரனுடன் "செங்குந்த பிரபந்தத் திரட்டு" ஒன்றும் சேர்த்தனுப்பவேண்டியது.

சி. குமாரசாமி முதலி,
தாமரைக்கேணி, மட்டுக்களப்பு.

குறிப்பு:— "தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம்" கொண்டுள்ள நோக்கப்படி ஸ்தாபிக்கப்படும் சங்கங்கள் எல்லாம் 'செங்குந்த குலசங்கம்' என்றே வழங்கற்பாலதாம்.

தி. சுப்பிரமணிய முதலியார்
சொ. கா. மு. காயாரோகண முதலி
தி. கு. குர. ம. இராமசாமி முதலியார்
தி. ச. அரு. கதிரேச முதலியார்

சைதாப்பேட்டை

தி. க. அளசிங்க முதலியார்
வே. முருகேச முதலியார்
தே. ஆ. மாணிக்க முதலியார்
செ. பழனி முதலியார்
தி. சி. முருகேச முதலியார்
மா. வெ. சொக்கலிங்க முதலியார்
S. குழந்தைவேலு முதலியார்

காரைக்கால்

ச. அ. சிதம்பர முதலியார்
உ. சீனிசாமி முதலியார்
மா. பொ. சொக்கலிங்க முதலியார்
அ. சபாபதி முதலியார்
பொ. வயித்தியலிங்க முதலியார்
உ. இராமசாமி முதலியார்

கோரநாடு

சி. த. அ. வீரப்ப முதலியார்
பெ. ப. கந்தசாமி முதலியார்
ச. அருணாசல முதலியார்
ஆ. அய்யாறு முதலியார்
கா. சி. சாமிநாத முதலியார்
ச. கு. பாவாடை முதலியார்

வாழுமங்கலம்

கோ. வ. வீரப்பெருமாள் முதலியார்
ப. ச. ஆறுமுக முதலியார்
க. ப. குழந்தைவேலு முதலியார்
அ. க. மலைப்பெருமாள் முதலியார்
த. க. பழனியாண்டி முதலியார்

சிங்கப்பூர்

வி. எஸ். அருணாசல முதலியார்
சி. தொ. மு. முருகைய முதலியார்

ரெங்கோன்

R. M. தியாகராஜ முதலியார்
ப. சி. மு. மூக்க முதலியார்
மு. த. சண்முகசுந்தர முதலியார்
N. முத்துலிங்க முதலியார்
S. M. மாரிமுத்து முதலியார்

வீரவநல்லூர்

எஸ். நடேச முதலியார்
ஆ. ச. சுப்பிரமணிய முதலியார்

ஆ. மு. ஆறுமுக முதலியார்
செங்குந்தர் அபிவிருத்தி சங்கம்

சேம்மனூர் கோயில்

பொ. முத்துவேலாயுத முதலியார்
இ. அ. அண்ணாமலை முதலியார்
வி. ரா. இருளப்ப முதலியார்

தஞ்சாவூர் - விஜயபுரம்

தி. மு. க. நடேச முதலியார்
ச. நாகலிங்க முதலியார்

குத்தாலம்

K. L. இராமலிங்க முதலியார்

அம்பாசமுத்திரம்

K. இராஜகோபால முதலியார்
ச. ஆண்டி முதலியார்

கோயமுத்தூர் - எலத்தூர்

C. P. கந்தசாமி முதலியார்

பொம்மம்பட்டி

கு. அ. கல்லைய முதலியார்

வள்ளிபுரம்

வ. ப. மாரிமுத்து முதலியார்

வேளச்சேரி

வே. க. துரைசாமி முதலியார்

கொழும்பு

தி. கு. குய. கோவிந்த முதலியார்

கோலாலம்பூர்

எஸ். முத்துக்குமாரசுவாமி முதலி

மெங்காராக் பெகாங்

வி. சிதம்பரம் பிள்ளை

கண்டி

எஸ். கே. செல்லையாப் பிள்ளை

மட்டுக்களப்பு

சி. குமாரசாமி முதலியார்
வி. அரம்பா முதலியார்

சிலோன், கொடிக்காமம்

வி. கந்தய்யா
ப. தம்பி அய்யா

காரவெட்டி

வி. கெ. சின்ன தம்பி முதலியார்
கந்தர் கத்திர் தம்பி

தென்காசி

T. P. K ஆறுமுக முதலியார்

சிலோன், - கம்பளை

சி.கரு. சி.கரு.இராஜகோபால் முதலி

(இன்னும் வரும்)

PRINTED AT THE NOBLE PRESS, TRIPLICANE, MADRAS.